வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 19.10.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 318 | பக்கங்கள் : 16




# வடக்கில் 18, 19 வயதினருக்கு நாளை மறுதினம் தடுப்பூசி!

## மருத்துவர் கேதீஸ்வரன் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19

**வடக்கில் 18, 19 வயதுடைய அனைவருக்கும் கோவிட் -19 தொற்று தடுப்பூசியான பைசர் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

18, 19 வயதுப் பிரிவினருக்கு நாடளாவிய ரீதியில் பைசர் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பமாகின்றது. வடக்கு மாகாணத்திலும் அன்றைய தினம் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலைகளில் பைசர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. அத்துடன், உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்ற இருக்கின்ற மாணவர்களும் அவர்களின் பாடசாலைகளிலேயே தடுப் பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

15

# கொரோனா தொற்றால் மேலும் 23 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 19

நாட்டில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தார். 10 ஆண்களினதும், 13 பெண்களினதும் மரணங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட

15

# 569 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 19

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 569 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 32 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளது.

15

# 2022 ஜனவரியில் புதிய அரசமைப்பு

## ஜீ. எல். பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் நிறைவடைந்து விட்டன. 2022 ஜனவரியில் புதிய அரசமைப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் பட தயாராக இருக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

15

# செட்டிகுளத்தில் டிப்பர் மோதி 15 வயது சிறுவன் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 19

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் பகுதியில் டிப்பர் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 15 வயது சிறுவன் மரணமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், முதலியார் குளம் பகுதியில் நேற்று மாலை இடம்

15

# விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வுகோரி வடக்கு - கிழக்கு தழுவிய போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 19

விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் கமநல சேவைகள் திணைக்களங்கள் முன்பாக நேற்று போராட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விடுத்த அழைப்பின் பேரிலும், தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவுடனும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், புத்தூர், உரும்பிராய், அம்பன், கமநல சேவைகள் நிலையங்கள் முன்பாகவும்,




நல்லூர் போராட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி, வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம், அக்கராயன், பூநகரி கமநல சேவைகள் முன்பாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன.

15

# மாகாண சபை தேர்தலை விரைவில் பழைய முறையின்படி நடத்தமுடியும்

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, ஒக். 19,

சட்டங்கள் திருத்தப்பட்டதன் பின்னர் பழைய முறைப்படி மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்த முடியுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய முறைமையின் கீழ் மாகாண சபை தேர்தலை நடத்துவதாக இருந்தால், அதற்காக நீண்ட காலத்தை செலவழிக்க நேரிடுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயத்தின் பின்னர், பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று

15

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியருக்கு பதிலாக கற்பிப்பர்!

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 19

21ஆம் திகதி பாடசாலைகள் திறக்கும்போது ஆசிரியர்கள் சமுகமளிக்காவிடின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கச்சேரியில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை





# ‘யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிச்சை’ நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று!

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ். போதனா மருத்துவமனை சத்திர சிகிச்சை நிபுணருமான மருத்துவர் சி. ராஜேந்திரா எழுதிய “யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிச்சை“ என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று சுகாதார நடைமுறைகளுக்கு அமைய இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா கலந்து கொண்டார்.

நூலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எஸ். ஸ்ரீதரன், வடக்கு மகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் வி. சுதர்சன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் இ. சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சத்திர சிகிச்சை நிபுணருமான மருத்துவர் எஸ். ரவிராஜ், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த மருத்துவர்கள், தாதியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-03)

# நவீன வடிவிலான முன்பள்ளி பிரான்பற்றில் திறக்கப்பட்டது!



மானிப்பாய், ஒக். 19

புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் பண்டத்தரிப்பு பிரான்பற்றில் நவீன வடிவில் அமைக்கப்பட்ட முன்பள்ளி நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ, ஜெபனேசன், வலி. தென் மேற்கு பிரதிப் பிர தேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம் ஆகியோர் இணைந்து முன்பள்ளியை திறந்து வைத்தனர்.

இந்த முன்பள்ளி அவுஸ்திரே லியாவில் வசித்து வரும் புலம் பெயர் உறவான ஜெயக்குமார் சிவபுவனேந்திராஜாவால் 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர், “பண்டத்தரிப்பு பிரான்பற்று உள்ளிட்ட 12 கிராமங்கள் இன்னமும் இரு வருடங்களில் பண்டத்தரிப்பு பிரதேச சபையாக உயரும். அதற்கேற்ப முன்னோடி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன’ என்று கூறினார். (ஐ-05)

# வடக்கில் 20 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 19

வடக்கு மாகாணத்தில் நேற்று 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நேற்று 159 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 2 பேர், யாழ். போதனா மருத்துவமனையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் ஒருவர் என யாழ். மாவட்டத்தில் 10 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் இருவர், மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவர், மன்னார் கடற்படை முகாமில் ஒருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒருவர் என வடக்கு மாகாணத்தில் 20 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

# பெண் தலைமை குடும்பத்துக்கு இராணுவத்தால் வீடு கையளிப்பு



வடமராட்சி, ஒக். 19

உடுப்பிட்டி, இமையாணன் பகுதியில் கணவரை இழந்து சிறுபிள்ளையுடன் நிரந்தர வீடின்றி வாழ்ந்த பெண்ணுக்கு நேற்று வீடு கையளிக்கப்பட்டது.

‘தலைக்கீழ் நிழல்’ வீட்டுத் திட்டத்தின் கீழ் இந்த வீடு இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

நல்லிணக்க பாலத்தை மேலும் உறுதிபடச் செய்யும் முகமாக இராணுவத் தளபதியால் வீடு அற்றவர்களுக்கான வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ், யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்குவின் எண்ணக்கருவில் 55ஆவது படைப் பிரிவின் சேனாதிபதி ஜெயவர்த்தன, 551 படைத் தளபதி பிரிகேடியர் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டுதலின்படி 4ஆவது சிங்க படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் நிரோஜன் தவுலகலவால் இந்த வீடு, அதன் உரிமையாளரான செல்வச்சந்நிதி தர்சினியிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் மற்றும் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)

# விசேட கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஒக். 19

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் “பொருளாதார நெருக்கடியும், விலைவாசி ஏற்றமும், அரசாங்கத்தின் நிலைப்பாடும்“ என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் வரும் நாளை புதன்கிழமை (பௌர்ணமி தினம்) பி. ப. 4 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதான கருத்துரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆற்றவுள்ளார். இவ் உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ளோரை பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கல்வி TV CHANNEL-1

19.10.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி TV CHANNEL - 2

19.10.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
19.10.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழர்களின் நிலை?

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவின் அழைப்புக்காகக் காத்திருக்கிறாரெனவும், அவர் அழைத்தால் அவருடன் பேசுவதற்கு தாங்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே ஜனாதிபதி கோட்டா பயவுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுவிட்டதாகக்கூறி, கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவரும் கொழும்பில் முகாமிட்டிருந்தனர். ஆனால், இறுதியில் சந்திப்பு பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சம்பந்தன், பல தடவைகள் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றார். ஆனால், இதுவரையில் அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எவையும் வெளியாகவில்லை. சம்பந்தன் தொடர்ந்தும் காத்துக் கொண்டிருக்கின்றார்.

பேச்சுக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம் – என்று கூறுவதானது, மறுபுறமாக தமிழர் அரசியலின் பலவீனத்தை படம்பிடித்து காண்பிக்கின்றது. யுத்தம் நிறைவுற்று 12 வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலத்தில் பல விடயங்கள் பற்றி பேசப்பட்டிருக்கின்றன. இராஜதந்திர போராட்டம் தொடர்பில் பேசப்பட்டது. பூகோள அரசியலை வளைப்பது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இப்படியெல்லாம் பேசிவிட்டு, ஜனாதிபதியின் அழைப்புக்காகக் காத்திருக்கின்றோம் என்று கூறுவதன் பொருள் என்ன? அவ்வாறாயின் இதுவரையில் சர்வதேசத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட விடயங்களுக்கு என்ன நடந்தது? ஒவ்வோர் ஆண்டும், உல்லாசப் பயணம் செல்வது போன்று, ஜெனிவாவிற்கு சென்றதன் பொருள் என்ன?

12 வருடங்களாக சர்வதேசத்தை நோக்கி முன்னெடுக்கப்பட்ட செயல்பாடுகள் தாக்கமுள்ளதாக இருந்திருப்பின், இன்று ஜனாதிபதியின் அழைப்புக்காகக் காத்திருக்கும் நிலையேற்பட்டிருக்காது. மாறாக, ஜனாதிபதி தமிழருடன் பேச வேண்டிய அவசயத்தை உணர்ந்து, கூட்டமைப்புக்காக அவர் காத்துக் கொண்டிருந்திருப்பார். ஆனால், தமிழர்களோடு பேச வேண்டிய அவசியம் தொடர்பில் அவர் போதியளவு கரிசனையை காண்பிக்கவில்லையாயின், அதன் பொருள் என்ன? பதில் தெளிவானது. அதாவது, இதுவரையில் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேசத்தை நோக்கிய நடவடிக்கைகள் காத்திரமானவையாக அமையவில்லை – அவற்றை கண்டு அரசாங்கம் அஞ்சவில்லை.

இதற்கான பொறுப்பை ஒரு குறிப்பிட்ட அமைப்பின்மீது மட்டும் சுமத்திவிட முடியுமா? நிச்சயமாக இல்லை. கூட்டமைப்பு பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவை பெற்றிருப்பதால், விடயங்களை கையாளுவதில், அவர்களுக்கு அதிக பொறுப்பு இருப்பது உண்மையாயினும்கூட, ஏனையவர்களுக்கும் இதில் பொறுப்புண்டு.

தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு, தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து தலைமைகளும் பொறுப்பேற்றாக வேண்டும். கடந்த 12 வருடங்களாக நீங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பிரசாரம் செய்தீர்கள். யார் சிறந்தவர் என்னும் குஸ்தியில் மாறி, மாறி மூக்கை உடைத்துக் கொண்டீர்கள். போதாக் குறைக்கு தேர்தல் மேடைகளில் வாய்களால் யுத்தம் செய்தீர்கள். நடந்தது என்ன? உங்களுடைய செயல்பாடுகள் காத்திரமானதாக இருந்திருக்குமானால் – இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியானதாக இருந்திருக்குமானால், இன்று, இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்குமா?

இது ஒரு விடயத்தை தெளிவாக உணர்த்துகின்றது. அதாவது, தமிழர்கள் ஒரு பாதிக்கப்பட்ட தரப்பாக தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவில்லை. 2009இற்கு பின்னரான அரசியல் என்பது, தமிழ் மக்களுக்கு அதுவரையிலிருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் என்னும் நிலைக்கும் அப்பால், பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம் என்னும் முகத்தையும் வழங்கியது. பாதிக்கப்பட்ட ஓர் இனம் என்னும் அடிப்படையில்தான் தமிழர்கள் சர்வதேசத்தின் கதவை தட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், ஒன்றாக, கருத்தொருமித்து, குறுகிய கால – நீண்டகால இலக்கின் அடிப்படையில் தமிழர் தரப்புக்கள் இதுவரை செயல்படவில்லை. இதன் விளைவுதான் அரசாங்கம் தமிழர்களுடன் பேசுவதற்கு நேரம் வழங்குவதற்கே யோசிக்கின்றது.

# பழைய நட்சத்திர வரைபடத்தை காட்சிப்படுத்தபோகும் பிரிட்டிஷ்

**ஃப்ரான்செஸ்கா கில்லட்**

*உலகின் மிக பழமையான நட்சத்திர வரைபடம் என்று அறியப்படும் ஓர் அற்புத பழம்பொருள், பிரிட்டன் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளது.*

*நெப்ரா ஸ்கை டிஸ்க் என்று அழைக்கப்படும் அப்பொருள், சுமார் 3,600 ஆண்டுகளுக்கு முந்தையது என்றும், அது வெண்கல காலத்தைச் சேர்ந்தது என்றும் நம்பப்படுகிறது. இந்த வட்ட வடிவிலான பொருள் கடந்த 1999ஆம் ஆண்டு ஜேர்மனியில் இருந்து எடுக் கப்பட்டது. இது 20ஆம் நூற்றாண்டின் மிக முக்கிய அகழ்வாய்வு கண்டுபிடிப்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது.*

*இப்பொருளின் கண்டுபிடிப்பு கூட சர்ச்சைக்குள்ளானது. சில அறிஞர்கள் அதன் உண்மைத்தன்மை குறித்து கேள்வி எழுப்பினர்.*

*இந்த நெப்ரா ஸ்கை டிஸ்கில் தங்கத்தில் சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், உத்தராயணம் - தட்சிணாயனம்... போன்ற வானியல் நிகழ்வு குறியீடுகள் உள்ளன.*

*இந்த வட்டத் தகடு, முந்தைய காலத்திலேயே மனிதர்களுக்கு வானியல் துறையில் இருந்த தனித்துவமான பார்வையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது என யுனெஸ்கோ கூறுகிறது. மேலும், இந்த நெப்ரா வட்டத் தகடை உலகின் முக்கியமான வரலாற்று ஆவணங்களில் ஒன்றாக யுனெஸ்கோவால் பட்டியலிட்டுள்ளது.*

*நெப்ரா வட்டத்தகடு ஜேர்மனியின் ஹலே நகரட்தில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய கால அருங்காட்சியகத்துக்குச் சொந்தமானது. நெப்ரா வட்டத்தகடு கடந்த 15 ஆண்டுகளில் முதல் முறையாக, ஒரு வெளிநாட்டு அருங்காட்சியகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*ஸ்டோன்ஹெஜ்ச் கண்காட்சியின் ஒரு பகுதியாக, பிரிட்டிஷ் அருங்காட்சியகம் இந்த நெப்ரா வான் வட்டத்தகட்டை காட்சிக்கு வைக்கவிருப்பதாகக் கூறியுள்ளது. இக் கண்காட்சி வரும் பெப்ரவரியில் தொடங்கப்பட உள்ளது.*

*"அது பலரை எதிர்பாராத விதத்தில் ஆச்சரியப்படுத்தும்" என ஸ்டோன்ஹெஜ்ச் கண்காட்சியின் ஏற்பாட்டாளர் நீல் வில்கின் கூறினார்.*

*"நெப்ரா வட்டத் தகடு மற்றும் சூரிய பதக்கம் தான், எஞ்சி இருக்கும் ஐரோப்பாவின் வெண்கல காலத்தைச் சேர்ந்த மிக முக்கிய பொருட்கள்" என்கிறார் அவர்.*

*"இரண்டு பொருட்களுமே சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக நிலத்தில் புதைந்திருந்த பிறகு, சமீபத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.*

*"பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின், வாழ்வில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் ஸ்டோன்ஹெஜ்ச் கண்காட்சியில் அந்த இரு பொருட்களும் முக்கியப் பகுதிகளாக இடம் பெறும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.*

*ஸ்டோன்ஹெஜ்ச்சின் உண்மையான நோக்கம் ஒரு மர்மமாகவே உள்ளது, ஆனால், கிமு 2,500இல் கட்டப்பட்ட இந்த கல் வட்டம், சூரியனின் இயக்கங்களுடன் ஒத்துப் போவதாக உள்ளது.*



*நெப்ரா வட்டத்தகட்டில் உள்ள சின்னங்கள் ஒரு சிக்கலான, ஐரோப்பாவில் உள்ள பரந்துபட்ட நம்பிக்கை அமைப்பின் பகுதியாகும். இதன் மூலம் மக்கள் வானத்தை பார்த்து வணங்கினர், சூரியனை வணங்கினர், சந்திரனை வணங்கினர், சூரிய உதயம் அல்லது சந்திர உதயத்தை ஒட்டி தங்களின் நினைவுச் சின்னங்களை அமைத்தனர் என தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் வெண்கல யுக நிபுணருமான பேராசிரியர் மிராண்டா ஆல்ட்ஹவுஸ் பிபிசியிடம் கூறினார்.*

*"நெப்ரா வட்டத்தகட்டில் இந்த சின்னங்கள் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டிருப்பதால், உண்மையில் முதன்முறையாக மக்கள் என்ன பார்க்கிறார்கள், உணர்கிறார்கள் மற்றும் நம்புகிறார்கள் என்பதை சொல்வதாக இருக்கிறது."*

*அவர் நெப்ரா வட்டத்தகட்டை ஒரு புனித உரையின் பதிப்போடு ஒப்பிடுகிறார்.*

*இந்த வட்டத்தகடு ஜேர்மனியில் நெப்ரா நகருக்கு அருகில் வெண்கல காலத்தைச் சேர்ந்த வாள்கள், கோடரிகள், பிற பொருட்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது.*

*இந்த பொருட்கள், இரு சட்டவிரோத புதையல் வேட்டைக்காரர்களால் மெட்டல் டிடெக்டரைக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டது, பின்னர் காவல்துறையினரால் அப்பொக்கிஷங்கள் மீட்கப்பட்டன.*

*இது வெண்கல யுகத்தைச் சேர்ந்ததாக பரவலாகக் கருதப்பட்டாலும், கடந்த காலங்களில் மற்றவர்கள் இது போலியானது என்றும் கூறினர்.*

*கடந்த செப்ரெம்பர் மாதம், இரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அப்பொருள் 1,000 ஆண்டுகள் இளையதாகவும் இரும்பு யுகத்தை சேர்ந்ததாகவும் இருக்கலாமென, அது தொடர்பாக ஒரு புதிய கட்டுரையை வெளியிட்டபோது, மீண்டும் வாக்குவாதங்களும், விவாதங்களும் எழுந்தன.*

*ஜேர்மனி அருங்காட்சியகம் அக்கூற்றுகளை நிராகரித்துள்ளது. ஸ்டோன்ஹெஜ்ச் உலகம் (கண்காட்சி) அடுத்த ஆண்டு பெப்ரவரி 17 முதல் ஜூலை 17 வரை நடைபெற உள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 19 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 02
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
நண்பர் ஒருவரின் உதவி எதிர்கால நன்மைக்கு வழிகாட்டும். குழந்தைகளின் மகிழ்ச்சி கருதி இன்று செலவுகள் செய்வீர்கள். வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள்.

**இடபம்**
பலகாலத்து நட்பின் உதவியால் நல்ல விஷயம் நடைபெறும். பழைய நட்பு ஒன்றைப் புதுப்பிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நல்ல முடிவிற்கு வரும்.

**மிதுனம்**
பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். வியாபாரத்தில் கிடைக்க வேண்டிய பங்கு முறையாகக் கிடைக்கும். பல நாட்கள் வராதிருந்த பதவி உயர்வு இப்போது கிடைக்கும்.

**கடகம்**
கடன் சுமையை முனைப்புடன் பெருமளவு குறைப்பீர்கள். அழகிய, புதிய வாகனம் வாங்கு வதில் ஆர்வம் காட்டுவீர்கள். மற்றவர்கள் குற்றம் சாட்டக்கூடிய எதையும் செய்யாதீர்கள்.

**சிம்மம்**
அவசரமோ பதற்றமோ இல்லாமல் எதையும் செய்யப்பாருங்கள். சமீபத்தில் ஏற்பட்ட மாற்றம் ஒன்று நன்மை தருவதாக அமையும். நண்பருக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் சிறு சலசலப்பு.

**கன்னி**
இன்று நல்ல பலன் ஒன்று உங்களுக்கு வரப்போகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற உறுதி கொள்வது நன்று. நேர்மையை விடாமல் செயல்பட்டு நிம்மதி அடைவீர்கள்.

**துலாம்**
கொள்கைப்பிடிப்போடு செயல்படுவதில் உறுதி தேவை. குழந்தைகளுக்கு முன்னேற்றங்கள் வந்து உங்களை மகிழ்விக்கும். தனிப்பட்ட வாழ்க்கையில் புதிய திருப்பம் ஒன்றைக் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
உடல்நலம் மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பல நாள் கழித்து பெற்றோருடன் சந்தோஷ சூழ்நிலை வரும். தொழில் முன்னேற்றம் முன்பைவிடச் சிறப்பாகவே அமையும்.

**தனுசு**
புதிய சொத்து வாங்கும் வாய்ப்பு உண்டு. கற்பனைக் கவலை தீரும். குழந்தைகளின் போக்கில் மகிழ்ச்சி அளிக்கும் மாற்றம் ஏற்படும். படிப்பிற்கேற்ற பணி கிடைக்கும். பிறருடன் அனுசரித்து செல்லவும்.

**மகரம்**
பெண்கள் எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. பொழுதுபோக்கில் கவனம் செலுத்தி மகிழ்ச்சி அடைவீர்கள். நாள் முழுக்க பிஸியாக இருப்பீர்கள். கவலை தீரும்.

**கும்பம்**
வருமானம் உயர நேர்மையற்ற வழியை நாட வேண்டாம். நாளின் முற்பகுதியில் உற்சாகமான செய்தி வரும். மன அமைதி உண்டு. பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது.

**மீனம்**
சிறு சங்கடம் ஒன்று ஏற்படக்கூடும். அலைச்சல் அதிகரிக்கும். பல நாள் சந்திக்காத நபர் ஒருவரைச் சந்தித்து மகிழ்வீர்கள். தன்னம்பிக்கையை கைவிட வேண்டாம். வேலைப்பளுமிக்க நாள்.

# எழுவர் விடுதலையில் ஸ்டாலின் மிக உறுதியாகவே இருக்கின்றார்

## தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவிப்பு



திருச்சி, ஒக். 19

“எழுவர் விடுதலையில் மற்றக் கட்சிகளை விட முதல்வர் ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார். அதை அவரது இலட்சியமாக வைத்துள்ளார். எழுவர் விடுதலை என்பது முதல்வர் ஸ்டாலினின் லட்சியம்” என்று தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

திருச்சி மத்திய சிறைச்சாலையில் தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் ரகுபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

“10 ஆண்டுகள் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ளவர்களை விடுவிப்பதற்கு முதலமைச்சர் அறிவித்துள்ளார். அதில் சில நிபந்தனைகள் உள்ளது. வெடிகுண்டு வழக்கு, தேசத் துரோக வழக்கு போன்ற கொடுங்குற்றத்தில் ஈடுபட்டவர்களை விடு விக்க முடியாது. எனவே, யார் யாரை விடுதலை செய்யலாம் என்கிற பட்டியலைத் தயார் செய்து வரு கிறோம். பட்டியல் தயாரிப்பு பணி முடிய இன்னும் 20 நாட் களுக்கு மேல் ஆகலாம்” என்றார்.

எழுவர் விடுதலை தொடர்பாகப் பேசிய அமைச்சர் ரகுபதி, “எழுவர் விடுதலையில் மற்றக் கட்சிகளை விட முதல் வர் ஸ்டாலின் உறுதியாக இருக் கிறார். அதை அவரது லட்சியமாக வைத்துள்ளார். ஏழு பேரில் ராமச்சந்திரன் தாய் உடல் நலக் குறைவால் பாதிக் கப்பட்டுள்ளதால் அவருக்கு பரோல் வழங்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் வலி யுறுத்தி வருகின்றன. இது குறித்து முதலமைச்சரிடம் கலந்து பேசி பரிசீலனை செய்யப்படும்” என்று கூறினார்.

# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கருக்கு சொந்தமான இடங்களில் திடீர் சோதனை

## லஞ்ச ஒழிப்பு துறை 43 இடங்களில் நேற்று அதிரடி

சென்னை, ஒக். 19

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக, முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்குச் சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை நேற்றைய தினம் திடீர் அதிரடிச் சோதனை நடத்தியுள்ளது.

முதல்வரும், தி.மு.க. தலைவருமான ஸ்டாலின் ஊழல் செய்த முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். அந்த வகையில் மாதம் ஒரு முன்னாள் அமைச்சர் வீடுகளில் சோதனை நடந்து வருகிறது. ஜூலையில் எம்.ஆர். விஜயபாஸ்கர், ஓகஸ்டில் எஸ்,பி.வேலுமணி, செப்ரெம்பரில் கே.சி.வீரமணி ஆகியோருக்கு சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை பொலிஸார் சோதனை நடத்தினர்.

இந்நிலையில் நேற்று முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. குறிப்பாக முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, அப்போதைய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்திடம் 8 முன்னாள் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றம்சாட்டி புகார் மனு அளித்தார்.

அதில், சி.விஜயபாஸ்கர் மீது அரசு அதிகாரிகள் மாறுதல்கள் மற்றும் நியமனங்களுக்காக 20.75 கோடி ரூபாய் லஞ்சம் பெற்று வைத்திருந்த கவர்கள் வருமான வரித் துறையால் கைப்பற்றப்பட்டன. புதுக்கோட்டையில் கல்குவாரியில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக கல் வெட்டியெடுத்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி ஊழல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டியிருந்தது. இதுதவிர அவர் மீது குட்கா ஊழல் குற்றச்சாட்டும் உள்ளது.

இந்நிலையில், சி.விஜயபாஸ்கள் மீது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக வழக்குப்பதிவு செய்துள்ள லஞ்ச ஒழிப்புத் துறையினர் அவருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை நடத்தினர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருச்சி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் 43 இடங்களில் சோதனை நடைபெற்றது.

# வேலூர் அரசு மருத்துவமனையில் பேரறிவாளனுக்கு பரிசோதனை!



சென்னை, ஒக். 19

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பரோலில் வந்துள்ள பேரறிவாளனுக்கு வேலூர் அரசு மருத்துவமனையில் நேற்றுக் காலை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள பேரறிவாளன், சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக அவரை பரோலில் விடுவிக்க வேண்டும் என்று, பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தார்.

இதனை ஏற்று, கடந்த மே மாதம் பேரறிவாளனுக்கு பரோலில் விடுவிக்கப்பட்டார். இதையடுத்து, ஜோலார்பேட்டையில் உள்ள வீட்டில் தங்கியுள்ள பேரறிவாளன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், நேற்று பேரறிவாளனுக்கு வேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் பேரறிவாளனுக்கு சிடி ஸ்கான் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கான் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# விவசாயிகள் போராட்டங்களின் பின்னணியில் ஜே.வி.பி. உள்ளது

## மஹிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 19

**விவசாயிகளின் போராட்டங்களின் பின்னணியில் ஜே.வி.பியே செயல்படுகின்றது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களை காக்கவே இயற்கை விவசாயத்தை நோக்கி பயணிப்பதற்கு முயற்சிக்கின்றோம். எனினும், இதற்கு எதிராக உர கம்பனிகளின் தேவைக்கேற்பவே ஜே.வி.பியால் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அப்பாவி விவசாயிகள் வீதியில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

எதிரணியால் முன்னெடுக்கப்படும் இத்தகைய போராட்டத்துக்கு அரசாங்க பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவு வழங்குவது வேதனைக்குரிய விடயமாகும்- என்றார்.





# “மெனிக்கே மகே ஹிதே” பாடலை ஜனாதிபதி முன் பாடிய யொஹானி

கொழும்பு, ஒக். 19

பாடகி யோகானி டி.சில்வா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை சந்தித்து அவருக்கு தனது பிரபல பாடலைப் பாடிக் காண்பித்தார்.

“மெனிக்கே மகே ஹிதே” என்ற தன்னைப் பிரபலமாக்கிய பாடலுடன் வேறு சில பாடல்களையும் யொஹானி இதன்போது பாடினார்.

யொகானி மற்றும் சதீஷன் பாடிய மெனிக்கே மகே ஹிதே பாடலை யூரியூப்பில் 150 மில்லியன் பேர் பார்வையிட்டுள்ளனர்.

இந்த பாடல் கடந்த வாரம் யூரியூப் சர்வதேச தரவரிசையில் முதல் 10 இடங்களுக்கு வந்து 11 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா விபத்தில் மாணவன் மரணம்!

வவுனியா, ஒக். 19

வவுனியா உலுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 16 வயதான பாடசாலை மாணவன் மரணமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை உலுக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த மாணவன் கட்டுப்பாட்டை இழந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருடன் மோதி, வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

விபத்தில் உலுக்குளம் பகுதியை சேர்ந்த ஹன்சா டில்சான் மிகிரிங்க (வயது-16) என்ற சிரசுமண மகா வித்தியால யத்தில் கல்வி கற்கும் மாணவனே மரணமடைந்தார்.

விபத்து தொடர்பாக உலுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மீனவர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 19

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று புத்தளம் முதல் கொழும்பு, காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பகுதி கொந்தளிப்பாக காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதியில் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இதனால் அந்தப் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# அரிசியின் விலையும் அதிகரிக்கும் அபாயம்

கொழும்பு, ஒக். 19

இலங்கையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் நிலையில், இன்னும் சில தினங்களில் அனைத்து ரக அரிசியின் விற்பனை விலைகளும் 25 ரூபாய் தொடக்கம் 50 ரூபா வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சுராஜ் ஜயவிக்ரம தெரிவித்தார்.

எனவே, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் விரைவாக அறிவிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால் எதிர்வரும் தினங்களில் அரிசிக்கான கேள்வி அதிகரிக்கும். இதனால் அரிசியின் விற்பனை விலையை அதிகரிக்க நேரிடும்.

அத்தோடு, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உரப்பிரச்னைக்கு தீர்வு காணாவிடின் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# நாட்டில் நாள் ஒன்றுக்கு 25 சிறுவர்கள் துஷ்பிரயோகம்

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்



கொழும்பு, ஒக். 19

நாட்டில் நாள் ஒன்றுக்கு 25 சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 21 சதவீதமானவர்கள் 5 வயதுக்கு குறைந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

பேருவளை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, இலங்கையில் நாளாந்தம் 6 பேர் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர் என குறிப்பிட்டார்.

# கல்வியங்காடு பொதுச்சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்வியங்காடு, செங்குந்தா பொதுச் சந்தை மரக்கறி வியாபாரிகள் நேற்றுகடையடைப்பில் ஈடுபட்டனர்.

செங்குந்தா சந்தைக்கு அண்மையான பகுதிகளில் உள்ள வீதிகளில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால், சந்தையில் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி இந்த கதவடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த ஒரு வருடமாக இவ்வாறான நிலை காணப்படுவதாகவும், சந்தைக்கு அண்மையிலுள்ள வீதிகளில் மரக்கறி, பழ வியாபாரத்தில் ஈடுபடுவோரை தடுத்து நிறுத்துமாறு யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபையினரிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும், அதற்குரிய நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே, கடையடைப்பில் ஈடுபட்டதாக செங்குந்தா பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமக்குரிய தீர்வு வழங்கும் வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் வியாபாரிகள் கூறினர்.

# தேர்தல்கள் ஆணைக்குழு தலைவருடன் சிறுபான்மை கட்சிகள் விரைவில் பேச்சு

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் நாட்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இதனை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அடுத்த வருடத்தின் முதற் பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அண்மையில் இடம்பெற்ற தேர்தல்கள் மறுசீரமைப்புக்கான தெரிவுக்குழுவுக்கு அறியப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய, குறித்த தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கோரவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

ஈழநாடு



# ஆசிரியர்கள் 25ஆம் திகதி முதல் மாற்று தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்கத்தினர் 25 ஆம் திகதி முதல் பாடசாலைக்கு சமுகமளித்து மாற்று தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுப்படத் தீர்மானித்துள்ளனர்.

அத்தோடு, அன்றைய தினமே பிற்பகல் 2 மணியளவில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றி நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுப்படவும் தீர்மானித்துள்ளனர்.

சம்பளப் பிரச்னை உள்ளிட்ட அரசாங்கத்திடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று இலங்கை ஆசிரியர்-அதிபர் சேவைச் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் கட மைக்கு சமுகமளிக்காமல் மீண் டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவும் ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்கத்தினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தொற்றுநீக்கும் திரவத்தை கைதிகள் பயன்படுத்த தடை

கொழும்பு, ஒக். 19

சிறைக் கைதிகள் தொற்றுநீக்கி திரவத்தை (SANITIZER) பயன்படுத்துவதைத் தடைசெய்ய சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைகளை சுத்தம் செய்வதற்காக சவர்க்காரத்தை வழங்கவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய தேவையின் போது மாத்திரம் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் கைதிகளுக்கு தொற்றுநீக்கி திரவத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கடந்த வாரம் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் ஈராணிய சிறைக் கைதிகள் குழு ஒன்று தொற்றுநீக்கி திரவத்தை அருந்தியதில் இருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# முட்டை விலையும் உயர்வு!

கொழும்பு, ஒக். 19

சந்தையில் கோழி முட்டையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். தற்போது கோழி முட்டையானது 20 முதல் 21 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

# ஆசிரியர்கள் 21ஆம் திகதி பாடசாலை செல்லவேண்டும்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

தற்போது வழங்கப்பட்டுள்ள முடிவை ஏற்று எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர், ஆசிரியர்களிடம் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொற்று காரணமாக அரசாங்கத்தின் அனைத்த வருவாயும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் அதிபர் - ஆசிரியர் சம்பள பிரச்னைக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள முடிவை விட சிறந்த



சலுகை வழங்க முடியாது என அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

# ஆசிரியர் சங்க தலைவருக்கு பகிரங்க தண்டனை வழங்குக!

## திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

**ஆசிரியர் போராட்டங்களை ஏற்பாடு செய்யும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மீது முட்டை வீச்சு நடத்தாமல், அரசர் கால தண்டனை வழங்கவாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

பதுளையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஸ்டாலின் என்பவர் கல்விச் செயல்பாடுகளை முழுமையாக அரசியல் மயமாக்கியுள்ளார். அரசாங்கத்தால் எதையும் கொடுக்கமுடியும் என்றால் இல்லை என்று அரசு கூறப்போவதில்லை. நிச்சயமாக கொடுக்க வேண்டிய விடயங்களை மக்களுக்கு வழங்கும். யார் இல்லாவிட்டாலும் தனியாக சென்றாவது ஜோசப் ஸ்டாலினுக்கு முட்டை வீச்சு நடத்த தயாராக இருப்பதாக நான் பகிரங்கமாக அறிவித்தேன். ஜோசப் ஸ்டாலினை கொழும்பு காலி முகத் திடலுக்கு அழைத்து அரசர் கால தண்டனை வழங்கியாவது இந்தப் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க முடியுமாக இருந் தால், தனிப்பட்ட ரீதியில் முயற் சித்தாவது நான் அதனை செய்வேன்-என்றார்.

(அ)

# தேர்தல் நடத்தும் முயற்சியை கைவிடவேண்டும் அரசாங்கம்

## கோருகிறார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு, ஒக். 19

மாகாணசபைத் தேர்தல் இடம்பெற்றால் பெறுபேறு அரசாங்கத்துக்கு பாதகமாக அமையும் என்பதனால் தேர்தலை நடத்தும் முயற்சியை அரசாங்கம் கைவிடவேண்டும் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்துள்ளார்கள் என சுட்டிக்காட்டிய அவர், மாகாண சபை தேர்தலுக்கு ஒதுக்கும் நிதியை நடுத்தர மக்களின் முன்னேற்றத்துக்கு அரசாங்கம் ஒதுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படும் தரப்பினரை திருப்திப்படுத்துவதற்காகவே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு தேர்தலை நடத்த வேண்டாம் என வலியுறுத்தி 12 பௌத்த அமைப்புக்களின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் அடிப்படையில் ஜனாதிபதி செயல்படுவார் என நம்புகிறாரெனவும் ஆனந்த தேரர் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசமைப்



பின் ஊடாக மாகாண சபைத் தேர்தல் முறைமையை முழுமையாக இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியிடம் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளாரென்று ஆனந்த தேரர் குறிப்பிட்டார்.

# பொது போக்குவரத்து ஆரம்பித்தால் மீண்டும் வைரஸ் பரவும் அபாய நிலை!

## மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 19

பொதுப் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதன் ஊடாக மீண்டும் வைரஸ் பரவலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையில் பொதுப் போக்குவரத்து சேவைகளை ஆரம்பிப்பதை ஒத்திவைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள் ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் கவனவீனமாக இருப்பதை அவதானித்து கவலையடைவதாகவும் அவர் கூறினார்.

# ஆளும் கூட்டணி முக்கியஸ்தர்களின் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 19

கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை நியூ போர்ட்ரஸ் நிறுவனத்துக்கு வழங்கிய ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்த நேரம் ஒதுக்குமாறு அரசின் பங்காளிக்கட்சிகள் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

அரசியல் மற்றும் அரசின் கொள்கைகள் சம்பந்தப் பட்ட விடயங்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் பேசுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசின் பங்காளிக் கட்சிகளுக்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

முன்னதாக, யுகதனவி மின் நிலைய விற்பனை குறித்து பேச்சு நடத்த நேரம் ஒதுக்குமாறு கோரி அரசின் 11 பங்கா ளிக்கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தன.

அந்தக் கடிதத்துக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ள ஜனாதிபதி கோட்டாபய, பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பிரதமரிடமும், நிதியமைச்சரிடமும் பேச்சு நடத்தவேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

யுகதனவி மின் நிலையத்தின் 40 வீத பங்குகள் விற்பனை செய்யப்பட்டமை குறித்து அரசின் பங்காளிக்கட்சிகள் செப்ரெம்பர் 23 ஆம் திகதி பிரதமர் மஹிந்தவுடன் பேச்சு நடத்தின. அந்த சந்திப்பில் திருப்தி இல்லை என்பதால் ஜனாதிபதியை சந்தித்துப் பேச இந்தக் கட்சிகள் தீர்மானித்தன. அதனையடுத்து ஜனாதிபதிக்கு 11 கட்சிகளால் கடிதமொன்று அனுப்பப்பட்டது. அந்த கடிதத்துக்கு அனுப்பிய பதிலிலேயே ஜனாதிபதி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் இந்தக் கடிதம் குறித்து பங்காளிக்கட்சிகள் நேற்று முன்தினம் கூடி தீவிரமாக ஆராய்ந்துள்ளன. அரசின், அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி என்பதால் அவரிடம் பேச்சு நடத்தவேண்டுமென வலியுறுத்தி மீண்டும் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்புவதென இங்கு தீர்மானிக்கப்பட்டது. மின் நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியவர்கள் யார் என்பது தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளதால், ஜனாதிபதியை மட்டும் சந்தித்து இதற்கான பதிலை பெறுவதென பங்காளிக்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

ஈழநாடு



# 21, 22 ஆம் திகதிகளில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

## ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

அதிபர்-ஆசிரியர் சங்கங்கள் இணைந்து எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனவென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அத்தோடு, 25ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கு செல்லவும், மாற்று தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடரவும் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிபர்-ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு மற்றும் நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாத்தல் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதோடு, அரசாங்கம் அச்சுறுத்தியோ, பலவந்தமாகவோ தங்களிடமிருந்து பாடசாலைத் திறப்புகளை வாங்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, அனைத்து அதிபர், ஆசிரியர்களும் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் பாடசாலைக்கு சமுகமளிக்கப் போவதில்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

---

### அமைச்சரவை மாற்றத்துக்கு முன்

# ஆளுங்கட்சி எம்.பிக்களை சந்திக்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ள இந்த சந்திப்பின்போது பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளனவென அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கெரவலப்பிட்டி தொடர்பிலான அமெரிக்க ஒப்பந்தம் பற்றி ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இதன்போது ஜனாதிபதி தெளிவுபடுத்தலை செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவை மாற்றமொன்று விரைவில் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே குறித்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

# ஆட்சி செய்யமுடியாவிடின் ஒதுங்கிவிடவேண்டும் அரசு

## ஐ.தே.க. பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.19

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான இந்த அரசாங்கத்தால் நாட்டை முன்னெடுக்க முடியாது. தற்போதுள்ள நிலைமையை மேலும் வீணடித்து விடாமல், ஆட்சியை முன்னெடுக்கக் கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு அரசாங்கம் ஒதுங்கிக் கொள்ளவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

ஹினிதும பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு ஒட்டுமொத்த விவசாயத் துறையும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மறுபுறம் தேயிலை உற்பத்தியும் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் காரணமாக தேயிலை உற்பத்தித்துறைக்கு இழைக்கப்படும் சேதம் நீண்ட நாள் சேதமாக உருவெடுக்கும். அதன் காரணமாகவே நாட்டுக்கு இரசாயன உரத்தை கொண்டுவருமாறு கோருகிறோம். இரசாயனப் பசளையினூடாக இந்தப் பிரச்



னையை நிவர்த்தி செய்துகொள்ளக்கூடியதாக இருக்கும். மீண்டும் தேயிலைச் செடிகளை செழிப்பாக்கவேண்டுமாயின் ஒரு வருடமாவது தேவைப்படும்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் ஒன்றரை வருடத்துக்கு அதிகமாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அரசாங்கத்தில் டொலர் பற்றாக்குறை நிலைமையே இந்த பிரச்னைக்கு காரணமாகும்.

தற்போது நாட்டிலுள்ள நிலைமையே 2011, 2013, 2014ஆம் ஆண்டுகளிலும் இருந்தது. அன்று, சர்வதேச பொருளாதார நெருக்கடியின் காரணமாகவே இவ்வாறானதொரு நிலைமை உருவாகியதாக காரணம் காட்டினார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னேரே தேர்தலை நடத்தினார்கள். அதனையடுத்தே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் மாயாஜாலமாக இருந்தன.

ஆகவே, நாட்டை வீணடித்துவிடாமல், இயலாதவற்றை செய்ய முயற்சிக்கக்கூடாது. முடியாவிட்டால், செய்யக்கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக் கொள்ளவேண்டும்-என்றார்.

---

# யாழ்ப்பாணத்தில் விவசாயிகள் கவனவீர்ப்பின் பதிவுகள்













விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கக் கோரி நேற்று யாழ்.மாவட்டத்தில் உடுவில், கரவெட்டி, அம்பன், புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையங்களின் முன்பாக இடம்பெற்ற போராட்டங்களின் பதிவு. (படங்கள்: வடமராட்சி நிருபர்)

# பொருளாதார முடக்கத்துக்கு கோவிட் மட்டுமா காரணம்?

கலாநிதி அமீரலி



**10. 10. 2021** ஞாயிற்றுக்கிழமை 72ஆவது இராணுவ தினம். அன்றைய கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களை நோக்கி, அவரும் அவரது அரசாங்கமும் அமைச்சர்களும் பிரதிநிதிகளும் அவர்களிடமிருந்து மக்கள் எதிர்பார்த்தவற்றைப் பெற்றுக் கொடுக்கத் தவறிவிட்டனரென்றும், அதனை தான் ஏற்றுக்கொள்வதாகவும், தான் மட்டுமன்றி அமைச்சர்களும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் மக்களிடம் மன்னிப்புக் கோரும் பாணியில் அவர் உரையாற்றியிருந்தார். இனி வரும் காலங்களில் மிக வீறுடன் நாட்டை கட்டியெழுப்புவோம் என்றும் உறுதி அளித்தார். அன்றைய வைபவத்தில் வருடந்தோறும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பதவி உயர்வுகள் வழமைபோன்று இடம்பெற்றன. இருந்தும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மன்னுப்புக் கோரும் பாணியில் உரையாற்றியது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

கூர்ந்து நோக்கினால் இந்த ஆட்சியினர் இழைத்த தவறுகள் ஒன்றிரண்டல்ல. அவற்றை பட்டியலிடுவதென்றால் இக்கட்டுரை நீண்டுவிடும். ஆகவே சுருக்கமாக அவற்றை வகைப்படுத்திக் கூறலாம். (1) பொருளாதார ரீதியான தவறுகள் (2) கோவிட் நோய் சம்பந்தப்பட்ட தவறுகள் (3) பாராளுமன்ற ஜனநாயக மரபுகள் சம்பந்தமான தவறுகள் (4) மனித உரிமைகள் மீறல் பற்றிய தவறுகள் (5) வெளிநாட்டு உறவு சம்பந்தமான தவறுகள் (6) நாட்டின் சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்கியமை (7) நீதித்துறையின் சுயாதீனத்தை பலவீனப்படுத்திய தவறுகள், என்றவாறு அவை பல வகையினுள் அடங்கும். இவற்றுள் எந்தத் தவறுகளுக்காக மன்னிப்புக் கோரினார் என்பது தெளிவில்லை. ஆனால், மக்களைப் பொறுத்தவரை இன்று அவர்களை வாட்டிவதைக்கும் மகாதவறு இவ்வாட்சியினரின் பொருளாதாரக் கொள்கைகள். இதைப்பற்றியே இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

கோவிட் நோயினாலேயே பொருளாதரம் முடங்கியது என்று கொள்ளை நோயின்மேல் முழுப்பழியையும் சுமத்துவது வெறும் நொண்டிச்சாட்டு. கொள்ளை நோய் பீடித்த எல்லா நாடுகளுமே பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கின என்பது உண்மையே. ஆனால் மற்றைய நாடுகள் தக்க பரிகாரங்களை பொருளியல் நிபுணர்களின் ஆலோசனையுடன் திட்டமிட்டுச் செயல்படுத்தியதனால் தேசியக் கடன்பளு ஏறியபோதிலும் மக்களின் கஷ்டங்கள் அதிகரிப்பதை மட்டுப்படுத்தின. ஆனால் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளோ ஒரு சிலரின், அதுவும் குறிப்பாக ஜனாதிபதியின், தனிப்பட்ட சிந்தனைகளிலிருந்து உருவாகியவை. பொருளியல் நிபுணர்களின் ஆலோசனைகள் உதாசீனஞ் செய்யப்பட்டன. பொதுவாகவே நிபுணத்துவர்களின் ஆலோசனைகளை மறுப்பதும், அவற்றைத் தரக்குறைவாக நினைத்து உதறித் தள்ளுவதும், ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஒரு கைவந்த கலையாகத் தெரிகிறது. இதனை கோவிட் நோயால் இறப்பவர்களின் பூதவுடல்களை எரிப்பதா புதைப்பதா என்ற சர்ச்சை மிகத் தெளிவாகவே அம்பலப்படுத்தியது. எரிக்கவேண்டுமென்று அவர் எடுத்த முடிவை முஸ்லிம் மக்களின் மத ஆசாரங்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்று வாதிப்பது ஒரு புறமிருக்க, கொள்ளைநோய் பற்றிய உலக நிபுணர்களின் ஆலோசனைகளை உதறித்தள்ளியமையே அவரது விபரீதமான முடிவுக்குக் காரணமாய் அமைந்ததென்பதே சாலப் பொருந்தும்.

அதேபோன்றே அவரது பொறுக்கியெடுத்த இறக்குமதித்தடைகளும் வரிச்சலுகைகளும். உதாரணமாக, மஞ்சள் வேருக்கும் மஞ்சள் தூளுக்கும், தால வெண்ணெய்க்கும், உரப்பசளைக்கும் விதிக்கப்பட்ட இறக்குமதித்தடைகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும், அத்துடன் நாட்டின் சூழல் இரசாயன மாசுபடுதலிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற அவரது வரவேற்கத்தக்க அபிலாசைகளின் வெளிப்பாடே. ஆனால், அந்த அபிலாஷைகளை எவ்வாறு முறையாக மக்களின் வாழ்க்கையைப் பாதிக்காமல் அடைய வேண்டுமென்று அவ்வத் துறைகளிலே பாண்டித்தியம் பெற்ற நிபுணர்களைக் கலந்தாலோசித்திருந்தால் இன்றைய அரிசி விலையேற்றத்தையும், உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டையும், விவசாயிகளின் ஆர்ப்பாட்டங்களையும், மக்களின் வெறுப்பினையும் வெகுவாகத் தவிர்த்திருக்கலாம். அவ்வாறே, சீனியின் இறக்குமதி வரியைக் குறைத்ததால் அரசாங்கத்தின் வருமானம் பாதிப்படையலாயிற்று. இவை மட்டுமா?

நீதித்துறையின் சுயாதீனத்தை அவரின் தலையீடுகள் பலவீனப்படுத்தியது போன்று நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கண்காணித்து அதற்கான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் அரசியல் தலையீடின்றி எடுக்கும் கேந்திரத் தாபனமாகிய மத்திய வங்கியின் சுயாதீனத்தையும் இந்த ஜனாதிபதி இழக்கச் செய்துள்ளார். அவருக்கு ஆதரவானவரை மத்திய வங்கியின் ஆளுனராகவும், அதேபோன்று ஆதரவானவர்களையே அவ்வங்கியின் நிதிச் சபையின் அங்கத்தவர்களாகவும் நியமித்து அவர்கள் அனைவரையும் ஜனாதிபதியின் பொருளாதரக் கொள்கைகளையே அமுல்படுத்தவேண்டும் என்றும் கட்டளை இட்டதால் மத்திய வங்கியின் சயாதீனம் காற்றிலே பறக்கவிடப்பட்டது. அதன் விளைவுகளோ பாரதூரமானவை.

அவற்றுள் ஒன்றுதான் இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கமும் விலைவாசிகளின் துரித ஏற்றமும். இதனை பணவீக்கம் என்று பொருளியல் அழைக்கும். அதற் கான பொருளிற் சாத்திர விளக்கங்களை இங்கே தவிர்த்து மத்தியவங்கி ஓயாது ரூபாயை அச்சடித்து ரூபாய் வெள்ள மொன்றையே ஏற்படுத்திவிட்டதால் அந்த ரூபாயின் மதிப்பு நாளாந்தம் குறையலாயிற்று. அதன் விளைவாக இறக்கு மதிப் பொருள்களின் விலைவாசி விஷம் போல் ஏறியுள்ளது. மக்களின் வருவாயோ அதற்கேற்றவாறு உயரவில்லை. இதனால் எரிவாயுவுக்கு மக்கள் திண்டாடுவதும், விறகாவது கிடைக்காதா பழைய அடுப்புகளை மீண்டும் பதுப்பித்து நெருப்பூட்டிச் சமைப்பதற்கு என்று ஏங்கி அலைவதும், அரிசிக்கும் பால் மாவுக்கும் வரிசையிலே மணிக்கணக்காகக் காத்துக்கிடந்து வெறுங்கையுடன் வீடுதிரும்புவதும் இன்றைய நாளாந்தக் காட்சிகள். இதனையா மன்னிக்குமாறு மக்களை இந்த ஜனாதிபதி வேண்டுகிறார்? அதற்குரிய பதிலை மக்களின் சமயற்கூடங்கள் அவருக்குச் சொல்லட்டும்.

> **கோவிட் நோயினாலேயே பொருளாதரம் முடங்கியது என்று கொள்ளை நோயின் மேல் முழுப்பழியையும் சுமத்துவது வெறும் நொண்டிச்சாட்டு. கொள்ளைநோய் பீடித்த எல்லா நாடுகளுமே பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கின என்பது உண்மையே. ஆனால், மற்றைய நாடுகள் தக்க பரிகாரங்களை பொருளியல் நிபுணர்களின் ஆலோசனையுடன் திட்டமிட்டுச் செயற்படுத்தியதனால் தேசியக் கடன்பளு ஏறிய போதிலும் மக்களின் கஷ்டங்கள் அதிகரிப்பதை மட்டுப்படுத்தின.**

இவற்றைவிட இன்னுமொரு முக்கியமான விடயம் ஜனாதிபதியின் வேண்டுகோளில் தொக்கு நிற்கின்றது. அவர் மக்கள் என்று யாரை அழைக்கின்றார்? சிறுபான்மையோர் உள்ளிட்ட எல்லா மக்களையுமா அல்லது அவருக்கு வாக்களித்த சிங்கள - பௌத்த மக்களை மட்டுமா? அவர் பதவிக்கு வந்ததும் தான் எல்லா இனமக்களுக்குமே ஜனாதிபதி என்று கூறினாலும் அவரது கடந்த இரண்டு வருடகால நடவடிக்கைகளும் சிறுபான்மை இனங்களின் நலன்களைப் புறக்கணித்தே நடந்தேறியுள்ளன. தேசிய கீதத்தையே தமிழில் பாடக்கூடாதெனச் சிங்கள - பௌத்த பேரினவாதிகள் கூச்சலிட்டபோது அதை ஆமோதித்தவரல்லவா இந்த ஜனாதிபதி? அதேபோன்று அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில் சிறுபான்மை இனங்களின் நிலங்கள் சூறையாடப்பட்டபோதும், முஸ்லிம் மக்களின் கோவிட் மரண உடல்கள் எரிக்கப்பட்டபோதும், இந்துக்களினதும் இஸ்லாமியரின் மதஸ்தலங்களை பௌத்த துறவிகளின் தலைமையில் மாசுபடுத்தப்பட்டபோதும், உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பிற்காக முழு முஸ்லிம் இனமே இன்றுவரை பேரினவாதிகளால் பழிவாங்கப்படும்போதும் கைகட்டிநின்றவர் ஜனாதிபதி.

இத்தனைக்கும் சேர்ந்துதானே இன்று உலக அரங்கில் இலங்கை ஒரு பிரச்னைக்குரிய நாடாக மாறியுள்ளது? ஐ.நாவின் மனித உரிமைகள் சபையும், உலக இஸ்லாமிய கூட்டுறவுத்தாபனமும், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்க முனைவது எதனால்? சுருக்கமாகக் கூறின் இராணுவத்துடனும் அதன் ஒழுங்குமுறையுடனும் பயிற்றப்பட்ட ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மனிதாபிமானத்தைப் புரிந்துகொள்வது சிரமமானதுதான்.

**கட்டுரையாளர் மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா.**



# உணவு விலையேற்றத்துக்கு 'பழகிக்கொள்ள' வேண்டுமா?

சரோஜ் பத்திரனா

"முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உணவுப் பாதுகாப்பின் பேரழிவு நிலைகள்" குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் எச்சரிக்கை மற்றும் உணவுப் பொருட்களின் விலையில் காணப்படும் உலகளாவிய ஏறுமுகப் போக்கு ஆகியவற்றுக்கு மத்தியில், உலக உணவு தினம் ஒக்ரோபர் 16 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

உலகளவில் 690 கோடி மக்கள் தொடர்ச்சியாக பசியுடன் வாழ்கின்றனர் என்றும், 85 கோடி மக்கள் கோவிட் -19 காரணமாக வறுமையின் பிடியில் சிக்கும் அபாயத்தில் உள்ளனர் என்றும் இங்கிலாந்தை தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனமான "த ஹங்கர் ப்ராஜெக்ட்" தெரிவிக்கிறது. அந்த 69கோடி மக்களில் 60% பேர் பெண்கள்.

அதிகரிக்கும் உணவு விலைகள் என் பது உலகெங்கிலும் உள்ள மக்கள் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என் பதையும், "உணவு வறுமையை" போக்க என்ன மாற்று வழிகள் பற்றி சிந்திக்கப் படுகின்றன என்பதையும் இங்கே நாம் பார்ப்போம். ஆனால் முதலில் உணவு விலைகள் ஏன் உயர்கின்றன என்று பார்க் கலாம்.

> பெருந் தொற்று காலகட்டத்தில் பல நாடுகளில், உணவு தானியங்கள் முதல் தாவர எண்ணெய் வரை மூலப்பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தன. வைரஸைக் கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நோய்த்தொற்று, உற்பத்தியையும், பொருட்களின் போக்குவரத்தையும் சீர்குலைத்தன.

**விலையேற்றம் ஏன் ஏற்படுகிறது?**

எல்லா இடங்களிலும், தொற்று நோய்க்குப் பிறகான பணவீக்கம் காரணமாக மக்கள், "அதிக உணவு விலைகளுக்குப் பழக வேண்டும்" என்று சர்வதேச உணவு நிறுவனமான "கிராஃப்ட் ஹெயின்ஸ்" எச்சரித்துள்ளது.

பெருந்தொற்று காலகட்டத்தில் பல நாடுகளில், உணவு தானியங்கள் முதல் தாவர எண்ணெய் வரை மூலப்பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தன. வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நோய்த்தொற்று, உற்பத்தியையும், பொருட்களின் போக்குவரத்தையும் சீர்குலைத்தன.

இப்போது இந்த பொருட்களின் விநியோகம் மீண்டும் தொடக்கியுள்ளதால், பல நாடுகளாலும் அதிகரிக்கும் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இது விலை உயர்வுக்கு வழிவகுத்துள்ளது. அதிக ஊதியங்கள் மற்றும் உயர் எரியாற்றல் விலைகளும் உற்பத்தியாளர்களுக்கு சுமையை அதிகரித்துள்ளது.

"தேவை மற்றும் அளிப்பு (சப்ளை) மீது, விலைகளுக்கு நேரடி தொடர்பு உள்ளது. மக்கள்தொகை அதிகரிப்பதனால், உணவுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சனைகள் காரணமாக சாகுபடியின் கீழ் உள்ள நிலப்பரப்பு குறைந்து வருகிறது. தண்ணீர் பற்றாக்குறை, மண் தரம் குறைவது, பருவநிலை மாற்றம், அதிகரிக்கும் தீவிர காலநிலை மாறுபாடு நிகழ்வுகள், புதிய தலைமுறையினர் விவசாயத்தை ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்வதில் உள்ள ஆர்வமின்மை ஆகியவை இந்தப்பிரச்சனைகளில் அடங்கும்" என்கிறார் வறுமை ஒழிப்பு நிபுணர் டாக்டர் குல்கர்னி. "விவசாயிகள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர், இது தொடர்ந்து அதிகரித்து வரும் உணவு விலைகளில் பிரதிபலிக்கிறது" என்கிறார் அவர்.

**சிறுவர் பெண்கள் பாதிப்பு**

இந்தப் பொருளாதாரப் பிரச்சினையால் பெண்களும், சிறுவர்களும் அதிகளவுக்குப் பாதிக்கப்படுகின்றார்கள். "உயரும் உணவு விலைகளின் தற்போதைய உண்மை , அவர்களுக்கு இரு முனைகள் கொண்ட வாள் போல உள்ளது. ஒரு புறம், விவசாயக் குடும்பங்கள் தங்களால் சாகுபடி செய்ய முடியாத உணவை வாங்க வேண்டியுள்ளது. அதனால் அவர்களின் செலவுகள் உயர்கின்றன அல்லது உணவை அவர்கள் பெறுவது குறைகிறது. இதன் விளைவாக பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுகிறது," என்று ஹாம்ப்சன் பிபிசியிடம் கூறினார்.



வறுமைக்கும், விலைக்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பதை டாக்டர் குல்கர்னி சுட்டிக்காட்டுகிறார். விலை அதிகரிக்கும்போது துரதிர்ஷ்டவசமாக வறுமையும் அதிகரிக்கிறது. கூடவே அவர்களிடமிருக்கும் சிறு தொகையும் செலவாகிவிடுகிறது என்று அவர் சொன்னார்.

"அதிக உணவு விலைகள் ஏழை சமூகங்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு, பசி மற்றும் பல உடல்நலம் தொடர்பான சவால்களையும் ஏற்படுத்துகின்றன. அதிக உணவு விலைகள் பசி, உடல்நலம் மற்றும் வறுமை ஆகியவற்றின் மோசமான சுழலில் இந்த சமூகங்களை சிக்கவைக்கின்றன,"என்கிறார் மருத்துவர் குல்கர்னி.

டெவலப்மென்ட் இனிஷியேடிவ்ஸ் என்பது உலகளாவிய அமைப்பாகும். இது வறுமையை ஒழிக்கவும், சமத்துவமின்மையை குறைக்கவும் தாக்குப்பிடிக்கும் சக்தியை அதிகரிக்கவும், தரவு மற்றும் ஆதாரங்களின் பலத்தை பயன்படுத்துகிறது. அதன் தலைமை நிர்வாக அதிகாரி ஹர்பீந்தர் கொல்காட், டாக்டர் குல்கர்னியுடன் உடன்படுகிறார்.

"அந்த உணவின் விலை உயர்ந்தால், தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதாவது அவர்கள் தீவிர வறுமைக்கு தள்ளப்படுகிறார்கள் அல்லது தீவிர வறுமைக் கோட்டுக்கு கீழே தள்ளப்படுகிறார்கள்," என்று அவர் கூறினார்.

**என்ன செய்ய முடியும்?**

வளர்ந்த நாடுகளில் உள்ள மக்கள் ஆடம்பரப் பொருட்களைக் குறைக்கலாம், வெளிநாடுகளில் விடுமுறை செல்வதை சுருக்கலாம், அல்லது தங்கள் பட்ஜெட்டை கவனமாக நிர்வகிக்கலாம். வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள சிலருக்கு இவை பொருந்தாது.

ஐ.நா., பிராந்திய அமைப்புகள் மற்றும் அந்தந்த அரசுகள், மக்களை வறுமையில் இருந்து வெளியே கொண்டு வரவும், அதிகரிக்கும் உணவு விலைகளின் சவாலை எதிர்கொள்ளவும் வழக்கமான அணுகுமுறைகளை பின்பற்றலாம். ஆனால் உலகெங்கிலும் உள்ள பல தொண்டு நிறுவனங்கள் புதுமையான முறைகளில் கவனம் செலுத்துகின்றன.

"உணவு மற்றும் வாழ்வாதார உதவிகள் ஒன்றன்பின் ஒன்றாக வழங்கப்பட வேண்டும்" என்கிறார் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமை இயக்குநர் க்யூ டோங்யு. "விவசாய உணவு முறைகளை ஆதரிப்பது மற்றும் நீண்ட கால உதவிகளை வழங்குவது, மீட்புக்கான பாதையை அமைக்கிறது. உயிர் வாழ்வதைத் தாண்டி, தாக்குப்பிடிக்கும் திறனை அதிகரிக்கிறது ... வீணடிக்க நேரம் இல்லை" என்று அவர் கூறினார்.

ஆனால் உணவுப் வறுமையை, அதிக பணத்தால் மட்டும் தீர்க்கமுடியாது என்று கொல்காட் கூறினார். "மக்களை வறுமையில் வைத்திருக்கும் முறைமைகள் மற்றும் கட்டமைப்புகளில் தீவிர சீர்திருத்தம் தேவை" என்று அவர் கூறினார்.

"ஒவ்வொரு அரசிலும், நிறுவனத்திலும், வணிகத்திலும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் ஒரு உலகளாவிய முயற்சி தேவை. இது ஏழ்மையான மக்களின் நிலைமையை மாற்றுவதற்கான அணுகுமுறையை மையமாக கொண்டிருக்கவேண்டும். நடப்பு நிலையை மாற்றி, மக்கள் பின் தங்கிவிடுவதைத் தடுக்கும் ஓர் உலக ளாவிய அமைப்பு உருவாக்கப்படவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"காலநிலைக்கு ஏற்றபடியான ஸ்மார்ட் விவசாயத்தை அறிமுகப்படுத்துவது, பருவநிலை மாற்ற தழுவலை மேம்படுத்துவது, மழைநீர் சேகரிப்பு மற்றும் சேமிப்புத்திறன்களை மேம்படுத்துதல், விதைகள் மற்றும் விவசாயம் தொடர்பான பிற மூலப்பொருட்களின் விலைகளை குறைத்தல், சுய நுகர்வுக்கு போதுமான அளவு வைத்திருந்து, மீதியை விற்று வருமானம் ஈட்ட விவசாயிகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்" என்கிறார் டாக்டர் குல்கர்னி.

வளரும் நாடுகளில் உள்ள கிராமப்புற வீடுகளுக்கு சரியான தகவல்களை பெறுவதற்கான போதிய வசதி இல்லாமை, உணவு வறுமைக்கு ஒரு காரணம் என்று ஹாம்ப்சன் கூறுகிறார். வெவ்வேறு சந்தைகளில் உள்ள விலைகள் பற்றி தெரியாததால் அவர்கள் விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களிடம் சரியாகப் பேச்சு நடத்த முடியாது. உள்ளூர் வானிலை பற்றியும் அவர்களுக்கு தகவல் தெரிவதில்லை.

உலகெங்கிலும் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் உள்ள மக்கள், உணவுப் பொருட்களின் விலை உயர்வை எப்படி சமாளிப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கும் நிலையில், உலகத்தால் விரைவான மற்றும் சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டால் நெருக்கடியை தவிர்க்கலாம் என்று ஆர்வலர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தனக்கு இப்போதும் நம்பிக்கை இருப்பதாக ஹாம்ப்சன் கூறுகிறார் .

"நாங்கள் பெண்கள், ஆண்கள் மற்றும் இளம் விவசாயிகளின் பேச்சைக் கேட்கிறோம், அவர்களின் கவலைகளை செவிமடுக்கிறோம். அவர்களை கொள்கை உரையாடல்களில் சேர்க்கிறோம். அவர்களின் முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம். கூட்டுறவு அமைப்புகள், விவசாயிகள் மற்றும் பெண்கள் குழுக்கள் அல்லது புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இதை செய்கிறோம். பருவநிலை மாற்றங்களுக்கான தீர்வு மற்றும் பின்னுக்கு தள்ளப்பட்ட குழுக்களை ஆதரிப்பதில் குறிப்பாக கவனம் செலுத்துகிறோம். அவர்கள் தேவைகளை கவனிக்கிறோம். சந்தைகளை அணுகுவது, கடன் பெறுவது மற்றும் தகவல்கள் கிடைப்பதில் பாகுபாடு நீங்குவதை உறுதிசெய்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்ற கருத்தை மருத்துவர் குல்கர்னியும் வெளிப்படுத்துகிறார். "இடைவெளிகள் அறியப்பட்டு, அடையாளம் காணப்பட்டதால் அவற்றை சீராக்க இன்னும் நேரம் இருப்பதால் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது" என்று அவர் குறிப்பிட்டார். "ஆனால், நாம் அவற்றை தொடர்ந்து புறக்கணித்தால் பிரச்னை ஏற்படலாம். நம்பிக்கை மங்கலாகத் தோன்றலாம்" என்று எச்சரிக்கிறார் டாக்டர் குல்கர்னி. - பி.பி.சி.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் : 45 நிமிடம்


கல்வி tv CHANNEL

1. 2 மணித்தியாலம் 2. 2 மணித்தியாலம் 30 நிமிடம் 3. 3மணித்தியாலம்


25. பிழையான கோவையைத் தெரிவு செய்க


1. 4 X 9 + 4 = 40
2. 4 X 8 + 8 = 40
3. 7 X 5 - 5 = 40


26. சத்தம் என்ற சொல் இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்திக் கீழே தரப்பட்டுள்ள முறையில் எழுதப்பட்டுள்ளது




இதற்கேற்ப தந்தம் என்ற சொல் எழுதப்படத்தக்க முறையைக் காட்டும் விடை யாது?

1. 


2. 

3. 




0 எனவும் தரப்ட்டுள்ளது.

இதற்கேற்ப கீழுள்ள வினாக்களுக்கான விடையை தெரிவு செய்க

27.  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1. 11 2. 9 3. 12

28. 

இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1. 12 2. 19 3. 38

வெற்றிடத்திற்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

29. எரிகிற ........................................................ எண்ணெய் ........................................ போல

1. நெருப்பில் - பூசியது
2. தணலில் - வடிந்தது
3. நெருப்பில் - ஊற்றியது

30. விவசாயி ........................................................ உழுது நெல்லை ........................................................

1. நிலத்தை - நட்டான்
2. வயலை - விதைத்தான்
3. சேற்றை - கொட்டினான்

31. குயில்கள் அழகான கூட்டினை கட்டின. என்ற கூற்று பொய்யாவதற்கான காரணம்

1. குயில்கள் கூடு கட்டுவதில்லை
2. குயில்கள் கூடுகளை விரும்புவதில்லை
3. குயில்கள் கூடு கட்டும் பிராணிகள் ஆகும்.

32. நாங்கள் தோட்டத்தில் பூக்கள் பறித்தோம், இதில் உள்ள பறித்தோம் என்பது

1. உயர்திணை, ஒருமை
2. உயர்திணை, பன்மை
3. அஃறிணை, பன்மை

33. பால் + குடம் என்பதை சேர்த்தெழுதினால்

1. பால்க்குடம் 2. பாற்க்குடம் 3. பாற்குடம்

34. பாபு வாங்கிய குடை ஒன்றில் என்ற விலை காட்டப்பட்டுள்ளது. எனின் அதன் விலையாக இருக்க கூடியது

1. 74 2. 949 3. 363

35. மோனாலிசா ஓவியம் காணப்படும் இடம்

1. சிகிரியா 2. தாஜ்மகால் 3. பாரிஸ்

36. இணையம் பயன்படுத்த கணணியுடன் இணைக்க வேண்டியது

1. மின்னழுத்தி 2. சைக்கிள் ஒன்றின் பற்சில்லுகள்
3. தொலைபேசி வலையமைப்பு

37. "மாலா பூ பறித்தாள்" இதில் உள்ள பயனிலை

# புலிகளுடன் இணைந்து செயல்பட்டவரே ஸ்டாலின்

## கல்விக் கட்டமைப்பை குழப்புகின்றார் என்று ஆளுங்கட்சி எம்.பி. டிலான் பெரேரா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 19

**"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டவரே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின்."**

- இவ்வாறு விமர்சித்துள்ளார் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

அதிபர் - ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது இராணுவத்தினர் மக்களைக் கொன்றனர் எனக் குறிப்பிட்டு, யாழ்ப்பாணத்துக்குச் சென்று புலிகளுடன் இணைந்து போராடியவர்தான் ஜோசப் ஸ்டாலின். அவர் புலிகளின் கட்சியைச் சேர்ந்தவர்.

அடுத்ததாக மஹிந்த ஜயசிங்க என்பவர் ஜே.வி.பியின் முழு நேர அரசியல் செயல்பாட்டாளர். இவர்கள்தான் கல்விக் கட்டமைப்பைக் குழப்புகின்றனர்" - என்றார்.

அதேவேளை, "பாடசாலைகளின் சாவிகளை ஒப்படைக்குமாறு அதிபர்களுக்கு, பொலிஸார் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இதனை ஏற்க முடியாது. வலயக் கல்விப் பணிப்பாளர் தீர்மானமொன்ற எடுக்கும்வரை அதனை ஒப்படைக்க மாட்டோம்" என்று அதிபர், ஆசிரியர் தொழில்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. (இ)



## கைக்குண்டுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 19

கைக்குண்டுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹபொல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கஹபொல பிரதேசத்தை சேர்ந்த 41 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ஆண் குழந்தை திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

பிறந்து இரண்டு மாதங்களேயான ஆண் சிசு உயிரிழந்தது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தகவல்கள் தெரிவித்தன.

"வட்டுக்கோட்டை, அராலி தெற்கைச் சேர்ந்த சிசு தாய்ப்பால் கொடுத்தபின் சில நிமிடங்களில் மயக்கமடைந்துள்ளது.

சிசு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டது.

எனினும், சிகிச்சை பயனின்றி சிசு உயிரிழந்தது" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (இ - 03)

## வேட்டையாட சென்ற மூவர் துப்பாக்கிகளுடன் சிக்கினர்

புத்தளம், ஒக். 19

புத்தளம், தப்போவ சரணாலயத்துக்கு அருகிலுள்ள பாவட்டாமடுவ பிரதேசத்துக்கு வேட்டையாடச் சென்ற மூவர் துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு கருவலகஸ்வெள வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தப்போவ, பாவட்டாமடு பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் வேட்டையாடும் நோக்கில் துப்பாக்கி, கட்டுத்துவக்கு என்பவற்றை எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் இரண்டில் பாவட்டாமடு பிரதேசத்துக்கு நேற்று அதிகாலை பயணித்தனர்.

இது தொடர்பில் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டத் தகவலையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள், துப்பாக்கி, கட்டுத்துவக்குடன் தோட்டாக்கள், மின்சாரத் தீப்பந்தங்கள் மூன்று என்பற்றையும் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (இ)



## இரண்டு லொறிகள் நேருக்கு நேர் மோதல்; ஐவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

புத்தளம், ஒக். 19

மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியும் கோழி உரத்தை ஏற்றிச் சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம், முந்தலம் - மங்களஎளிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என முந்தலம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலையிலிருந்து கொழும்பு நோக்கி மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியும் நவடன்குளத்திலிருந்து நுரைச்சோலை நோக்கிச் சென்ற லொறியுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



இந்த விபத்தில் இரு லொறிகளின் சாரதிகளும் மற்றும் லொறியில் பயணித்தவர்களுமே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பிரதேச மக்களின் உதவியுடன் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இரு லொறிகளும் பாரியளவில் சேதமடைந்துள்ளன.

விபத்து தொடர்பில் முந்தலாம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவடையும்வரை அமைச்சர்கள் வெளிநாடு பறக்க தடை

கொழும்பு, ஒக். 19

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி முதல் டிசெம்பர் 10ஆம் திகதி வரை தனிப்பட்ட ரீதியிலோ அல்லது உத்தியோகபூர்வமாகவே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அரசு பணிப்புரை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஜனாதிபதி செயலாளரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 12 ஆம் திகதி நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அன்றைய தினம் நிதி அமைச்சரின் உரை இடம்பெறும். நவம்பர் 13 ஆம் திகதி முதல் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பாகும்.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் ஆரம்பமாகும். டிசெம்பர் 10 ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும்.

எனவே, பட்ஜெட் கூட்டத்தொடரின்போது சிலவேளை அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு எதிரணி வாக்கெடுப்பைக் கோரும். மேலும் சில தரப்புகள் யோசனைகளை முன்வைப்பார்கள்.

இவை தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கும், எந்தவொரு நிதி ஒதுக்கீட்டையும் தோற்கடிக்காமல் இருப்பதற்காகவுமே அமைச்சர்களுக்கு வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் உட்பட அத்தியாவசிய தேவைகள் இருப்பின் அது தொடர்பில் முன்கூட்டியே தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர்களுக்கு அரச தலைமையால் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)



# கேரளா வெள்ளம்; 26 பேர் உயிரிழப்பு

திருவனந்தபுரம், ஒக். 19

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பெய்துவரும் கனமழையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் ஐந்து சிறுவர்களும் அடங்குவர். எனினும் பலர் காணாமல் போயிருக்கின்றனர். இதனால், பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதேசமயம், ஆறுகள், குளங்கள் பலவும் நிரம்பியுள்ளன. ஆசியாவின் மிக உயரமான அணையாகக் கருதப்படும் இடுக்கி அணையில் மட்டும் 2403 அடியை எட்டியுள்ளது நீர். இதையடுத்து பலத்த முன்னெச்சரிக்கையுடன் நேற்று காலை அணைகள் பலவும் திறக்கப்பட்டன.

இந்த நிலையில், கோட்டாயம் மாவட்டத்தில் பல வீடுகளை வெள்ளம் அடித்து சென்றுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களை தங்க வைப்பதற்காக 184 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த, 2018ஆம் ஆண்டு, எந்த எச்சரிக்கையும் விடுக்கப்படாமல் அணைகள் திறக்கப்பட்டமையால் ஏற்பட்ட வெள்ளத்தால் 400 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாய்வான் நீரிணை பகுதியில் பதற்றம்; அமெரிக்க, கனடா போர் கப்பல்களால்!

வாஷிங்டன், ஒக். 19

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், சீனாவின் எதிர்ப்பை மீறி தாய்வான் நீரிணைப் பகுதியில் அமெரிக்காவும் கனடாவும் போர் கப்பல்களை அனுப்பியுள்ளன.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான அர்லீக் பியூர்க் ரக யு. எஸ். எஸ். டேவே போர்க் கப்பல் சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான தாய்வான் நீரிணைப் பகுதியில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சென்றது.

கனடா கடற்படைக்குச் சொந்தமான எச். எம். சி. எஸ். வின்னிபெக் போர்க் கப்பலும் யு. எஸ். எஸ். டேவே கப்பலுடன் இணைந்து கண்காணிப்பில் ஈடுபட்டது. இந்தோ - பசுபிக் கடல் பகுதியில் அனைவருக்கும் சொந்தமானது என்ற அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகளின் உறுதிப்பாட்டை பறைசாற்றும் விதமாக அந்த இரண்டு கப்பல்களும் தாய்வான் நீரிணை பகுதியில் செலுத்தப்பட்டன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு மாகாணமாக சீனா கருதி வருகிறது. அந்த நாட்டை தங்களுடன் மீண்டும் இணைத்துக்கொள்ளும் உரிமை தங்களுக்கு இருப்பதாகவும் அதற்குத் தேவைப்பட்டால் இராணுவ பலம்கூட பயன்படுத்தப்படும் எனவும் சீனா கூறி வருகிறது.


தாய்வானில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை பிரிவினைவாத இயக்கம் என சீனா குற்றம் சாட்டி வருகிறது.

தாய்வானோ, தாங்கள் ஏற்கெனவே இறையாண்மை கொண்ட தனி நாடாக இயங்கி வருவதாகவும் சீனாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் கூறி வருகிறது.

இந்த நிலையில், தாய்வான் வான் எல்லைக்குள் சீன போர் விமானங்கள் அடிக்கடி ஊடுருவி பரபரப்பை ஏற்படுத்தின.

2025ஆம் ஆண்டு தாய்வானை சீனா ஆக்கிரமிக்கும் என அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அச்சம் தெரிவித்த நிலையில், அமைதியாக தாய்வான் சீனாவுடன் இணைக்கப்படும் என்று சீன ஜனாதிபதி கூறியிருந்தார்.

சீனாவுக்கு பதிலடியாகவும் தாய்வானுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவும் சீனாவும் தங்கள் போர் கப்பல்களை தாய்வான் நீரிணைக்கு அனுப்பியுள்ளன. இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (ஐ)




# அழுதவதற்கு ஓர் அறை; ஸ்பெயினில் அறிமுகம்!

மட்ரிட், ஒக். 19

"வாருங்கள் அழலாம்", என்ற அழைப்புடன் மனதில் உள்ள உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்க, ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் அழுகை அறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அங்கு சென்று, மனதில் உள்ள கோபம், எரிச்சல், ஏமாற்றம், தனிமை உள்ளிட்ட அனைத்து இறுக்கமான உணர்ச்சிகளையும் கொட்டித் தீர்க்கலாம். அறையில் நுழைபவர்கள், யாரிடம் மனம் விட்டுப் பேச விரும்புகிறார்களோ அவர்களிடம் தொலைபேசியில் அழைத்துப் பேசலாம். இங்கு, மனநல ஆலோசகரைத் தொலைபேசியில் அழைத்துப் பேசும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

அழுகை அறை குறித்து சுவீடன் மாணவர் ஜோன் லெஸ்மன் கூறும்போது, ''மன நலம் சார்ந்த பிரச்னைகளை இவ்வாறு காட்சிப்படுத்துவது உண்மையிலேயே அருமையான யோசனை. ஸ்பெயின் மற்றும் பிற ஏராளமான நாடுகளில் அழுவது தவறான ஒன்று என்பது போலச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணத்தை முதலில் மாற்ற வேண்டும்'' என்று தெரிவித்தார்.

# ஷியா முஸ்லிம் பிரிவினர் சகல இடத்திலும் தாக்கப்படுவர்!

## ஐ. எஸ். அமைப்பு எச்சரிக்கை

பாக்தாத், ஒக். 19

ஷியா முஸ்லிம்கள் அனைத்து இடங்களிலும் குறிவைக்கப்படுவார்கள் என்று ஐ. எஸ். அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கானில் குண்டூஸ் பகுதியில் மசூதி ஒன்றில் சில நாட்களுக்கு முன்னர் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். இதேபோன்று, கந்தஹார் பகுதியில் ஷியா மசூதி ஒன்றில் கடந்தவாரம் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 60இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானில் நடத்தப்பட்ட இந்த இரு குண்டு வெடிப்புகளுக்கும் ஐ. எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. ஆப்கானிஸ்தானில் இயங்கும் ஐ. எஸ். தீவிரவாதிகள் முழுமையாக அகற்றப்படுவார்கள் என்று தலிபான்கள் முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்த நிலையில், ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக அறிக்கை ஒன்றை ஐ. எஸ். அமைப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து ஐ. எஸ். வெளியிட்ட அறிக்கையில், "ஷியா முஸ்லிம்கள் எங்கும் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுவார்கள். பாக்தாத் முதல் கோரசன் வரை இந்தத் தாக்குதல் தொடரும்", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆப்கானிஸ்தானில் உள்ள ஷியா முஸ்லிம்கள் தாக்குதலுக்கு உள்ளாவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# கட்டாய மதமாற்ற சட்டம்; பாகிஸ்தானில் எதிர்ப்பு!

இஸ்லாமாபாத், ஒக். 19

பாகிஸ்தானில் கொண்டு வரப்படும் கட்டாய மதமாற்ற தடை சட்டத்துக்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பாகிஸ்தானில் இந்து, கிறிஸ்தவ மற்றும் சீக்கிய மதங்களை சேர்ந்த சிறுமிகள் கடத்தப்பட்டு, கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு, திருமணம் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கட்டாய மதமாற்றத்திற்கு எதிராக மனித உரிமைகள் அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன. இதனையடுத்து அங்கு கட்டாய மதமாற்ற எதிர்ப்பு சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக புதிய கட்டாய மதமாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்தில், மதம் மாற விரும்புபவர்கள் சுய விபரங்களுடன் எதற்காக மதம் மாறுகிறோம் என்ற தகவலை மாவட்ட நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும். மதம் மாறுபவர்கள் வற்புறுத்தல், மிரட்டல் காரணமாக மதம் மாறவில்லை என்பதை நீதிபதியே உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கட்டாய மதமாற்றம் செய்வோருக்கு 5 முதல் 10 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை, 2 இலட்சம் பாகிஸ்தான் ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் இந்த மசோதாவில் விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். (ஐ)

# பிரான்ஸ் நாட்டின் தூதுவரை வெளியேற்றியது பெலாரஸ்!

மின்ஸ்க், ஒக். 19

பெலாரஸ் நாட்டில் இருந்த பிரான்ஸ் தூதுவர் நிகோலஸ் டி லாகோஸ்டேவை வெளியேறுமாறு அந்த நாட்டின் அரசாங்கம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மின்ஸ்க் நகரில் இருந்து அவர் வெளியேறினாரென ஏ. எவ்.பி செய்தி தளம் தெரிவித்துள்ளது.

நிகோலஸ் டி லாகோஸ்டே பெலாரஸ் நாட்டை விட்டு ஞாயிற்றுக்கிழமையே வெளியேறினாரென தூதரக செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

57 வயதான லாகோஸ்டே கடந்த ஆண்டுதான் அந்த நாட்டில் தூதராக பணியமர்த்தப்பட்டார். கடந்த ஒகஸ்டில் நடந்த தேர்தல் வெளிப்படையாக நியாயமாக நடத்தப்பட்டது என ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மேலும், பெலாரஸின் ஜனாதிபதியாக இருக்கும் லூகஷென்கோவின் ஆட்சிமீது பல தடைகளும் விதிக்கப்பட்டன. நிகோலஸ் டி லாகோஸ்டே தன் விவரங்களை ஜனாதிபதி அலெக்சாண்டர் லூகஷென்கோவிடம் காண்பிக்க மறுத்தாரென உள்ளூர் ஊடகங்களில் கூறப்படுகிறது. (ஐ)

# இலங்கை டெஸ்ட் அணியின் முதல் தலைவர் காலமானார்!



கொழும்பு, ஒக். 19

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முதல் தலைவர் பந்துல வர்ணபுர காலமானார். அவருக்கு வயது 68.

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

இலங்கை ஒரு முழுமையான டெஸ்ட் விளையாடும் நாடாக மாறியபோது இலங்கை அணியை வழிநடத்தும் கௌரவம் அவருக்கு கிடைத்தது. அவர் 1975 முதல் 1982 வரை தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் 4 டெஸ்ட் மற்றும் 12 ஒரு நாள் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். (ஐ)




## 4 பந்துகளில் 4 விக்கெட் அயர்லாந்து வீரர் சாதனை!

அபுதாபி, ஒக். 19

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் 4 பந்துகளில் 4 விக்கெட்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார் அயர்லாந்தின் கர்டிஸ் கேம்பர்.

அபுதாபியில் நேற்று நடந்த போட்டியில் நெதர்லாந்து - அயர்லாந்து அணிகள் மோதின. இதில் முதலில் நெதர்லாந்து அணி துடுப்பெடுத்தாடியது.

கர்டிஸ் கேம்பர் 9ஆவது ஓவரை வீசினார். அப்போது நெதர்லாந்து 2 விக்கெட்கள் இழப்புக்கு 50 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கேம்பரின் இரண்டாவது பந்தில், காலின் 11 ஓட்டங்களில் வீழ்த்தினார். அடுத்த மூன்று பந்துகளிலும் ரயன் ரென் டொஸ்சாட், ஸ்கொட் எட்வேர்ட்ஸ், ரொலோப் வான் டெர் மெர்வ் ஆகியோரை ஆட்டமிழக்க செய்தார்.

இதனால், ஹட்ரிக் சாதனையுடன் 4 விக்கெட்களை கேம்பர் கைப்பற்றினார். இதன்மூலம், இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் பிரெட் லீக்கு (2007) அடுத்ததாக ஹட்ரிக் விக்கெட் எடுத்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

முன்னதாக ரஷீத் கான் (2019), மலிங்க (2019) ஆகியோர் 4 பந்துகளில் 4 விக்கெட்களைக் கைப்பற்றினர். (ஐ)

## சகீப் அல் ஹசன் புதிய சாதனை!

அல் அம்ரித், ஒக். 19

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை சகீப் அல் ஹசன் படைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஸ்கொட்லாந்துக்கு எதிரான போட்டியில் சகீப் அல் ஹசன் 2 விக்கெட்களை கைப்பற்றினார். இதன் மூலம் அவர் சர்வதேச போட்டிகளில் 108 விக்கெட்களை கைப்பறினார். 89 போட்டிகளில் அவர் இந்த விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

இதன்மூலம், சர்வதேச இருபது - 20 போட்டிகளில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற பெருமையை பெற்றிருந்தார்.

முன்னதாக இந்த சாதனையை இலங்கையின் லசித் மலிங்க (107 விக்கெட்கள்) வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இருபது - 20 போட்டிகளில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர்களின் பட்டியலில் நியூசிலாந்தின் ரிம் சவுதி 3ஆவது இடத்திலும் (99 விக்கெட்), பாகிஸ்தானின் அப்ரிடி 4ஆது இடத்திலும் (98 விக்கெட்), ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் 5ஆவது இடத்திலும் (95 விக்கெட்) உள்ளனர். (ஐ)







ரி - 20 உலக கிண்ணம் முதல் சுற்று:

## ஸ்கொட்லாந்து அணியிடம் வீழ்ந்தது பங்களாதேஷ்!

அல் அம்ரத், ஒக். 19

ஸ்கொட்லாந்து அணியிடம் 6 ஓட்டங்களால் பங்களாதேஷ் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

இருபது - 20 உலகக் கிண்ண தொடர் ஓமான் - ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகியுள்ளது. இதில், ஓமானில் முதல் சுற்று போட்டி நடக்கிறது. இதில் 'பி' பிரிவுக்கான போட்டியில் பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

அல் அம்ரத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்துக்கு ஜோர்ஜ் முன்செய், கெய்ல் கோட்ஷெர் தொடக்கம் கொடுத்தனர். கோட்ஷெர் ஓட்டம் எதையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

முன்செய் பொறுப்பாக ஆட, மறுமுனையில் வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்ந்தனர். முன்செய் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 7ஆவது விக்கெட்டுக்காக களமிறங்கிய கிறிஸ் கிறீவ்ஸ், மார்க் வாட் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கிறீவ்ஸ் 28 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 45 ஓட்டங்களையும், மார்க் வாட் 2 பௌண்ட்ரிகளுடன் 22 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில், 9 விக்கெட்களை இழந்த ஸ்கொட்லாந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் மஹெடி ஹசன் 3 விக்கெட்களையும், முஸ்தபிஹுர் ரஹ்மான், சகீப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தொடக்கம் கொடுத்த லிதொன் டாஸ் 5, சௌம்ய சர்கார் 5 ஓட்டங்களுடன் வீழ்ந்தனர்.

அடுத்து வந்த சகீப் அல்ஹசன் 20, முஸ்பிஹூர் ரஹீம் 38, மஹ்முடுல்லா 23 என ஓரளவு நிதானம் காட்டி ஆட்டமிழந்தனர். ஆனால், பின்னர் வந்த வீரர்களும் சொற்பமான ஓட்டங்களையே எடுத்தனர்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் 7 விக்கெட்கள் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால், 6 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி தோல்வியடைந்தது. ஸ்கொட்லாந்தின் பந்துவீச்சில் பிரெட் வேல் 3 விக்கெட்களையும், கிறிஸ் கிறீவ்ஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக கிறிஸ் கிறீவ்ஸ் தெரிவானார். (ஐ)



## இந்தியன் வெல்ஸ் ஓப்பன் சம்பியன் வென்றார் படோசா

கலிபோர்னியா, ஒக். 19

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸின் சம்பியன் பட்டத்தை ஸ்பெயினின் பௌலா படோசா கைப்பற்றினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமானது. இதில் பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்தது.

பெலாரஸின் விக்ரோறியா அசரென்கா - ஸ்பெயினின் பௌலா படோசா மோதிய இந்தப் போட்டியில், 7-6 (5) 2-6 7-6 (2) என்ற செற் கணக்கில் படோசா வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம், கலிபோர்னியா பாலைவனத்தில் போட்டியை வென்ற முதல் ஸ்பானிஷ் பெண்ணாக படோசா திகழ்கிறார். (ஐ)



# ரயில் மோதி 20 பசு மாடுகள் மரணம்!

கொடிகாமம், ஒக். 19

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் 20 பசு மாடுகள் சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்தன.

கிளிநொச்சியில் இருந்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். நோக்கிப் பயணித்த பரீட்சார்த்த ரயில் மோதியதிலேயே இந்த 20 பசு மாடுகளும் உயிரிழந்தன.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனி ஒருவருக்குச் சொந்தமான குறித்த மாடுகள், மேய்ச்சலுக்காகப் பிறிதோர் இடத்துக்குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ)

# அரசின் அசமந்தப்போக்கு தொடருமானால் பட்டினி சாவு வெகுதொலைவில் இல்லை

## வடிவேல் சுரேஷ் எம்.பி. அபாய எச்சரிக்கை

பதுளை, ஒக்.19

**அரசின் அசமந்தப்போக்கால் விரைவில் நாட்டு மக்கள் பெரும் பஞ்சத்தால் வதைபடக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாளுக்கு நாள் மக்களின் அத்தியாவசியப் பொருட்கள், உணவுப் பொருட்கள், மருந்து மாத்திரைகள் என அடுக்கடுக்காக விலைகள் உச்சம் ஏறிய வண்ணமே உள்ளது. இது பற்றி அரசிடம் வினாவினால் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதும், 'கழுவிய மீனில் நழுவிய மீன்' போல் நடந்துகொள்வதும் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைக் கொணர்ந்



துள்ளது.

விலை வாசி உயர்வு ஒரு பக்கம் இருக்கும்போது, மற்றொரு பக்கம் வாழ்வாதாராத்தின் அடிப்படையாகவுள்ள விவசாயிகளின் மடியில் அரசு தற்போது கைவைத்துள்ளது. சர்வதேச அளவில் விவசாயிகளின் பிரச்னை பேசப்பட்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போது நாட்டில் உரத்துக்கான தட்டுப்பாடானது விவசாயிகளின் மத்தியில் பெரும் அவல நிலையாகவுள்ளது.

குறிப்பாக மலையக மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை தேயிலை பயிர்ச்செய்கை, மரக்கறி உற்பத்தி போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டே வாழ்பவர்கள். இவ்வாறு எமது மக்களைத் தொடர்ந்தும் இந்த அரசு குறிவைப்பது ஏன்?

சர்வதேச அளவில் பல மில்லியன் டொலர்களை அரசு கடனாகப் பெற்றுக்கொண்ட போதிலும் மலையக மக்களுக்கென எதுவித சலுகைகளும் வழங்கப்படவில்லை என்பது நிதர்சனம் மிக்க உண்மையாகும்.

அரச தரப்பினர் தேர்தல் காலங்களில் அனுதாப வாக்குக்காகவும், அரசியல் சுயலாபத்துக்காகவும் மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு இன்று கமுக்கமாக சொகுசு வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இங்கு அப்பாவி மக்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தொடர்ந்தும் அரசு தனது அசமந்தப்போக்குத் தொடருமானால் நாட்டில் பட்டி னிச் சாவு என்பது வெகுதொலைவில் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே, அரசு மக்களுக்கான தீர்வை விரைந்து பெற்றுக்கொடுக்க வேண்டும்" - என்றார். (இ)



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மரம் நடுகை திட்டம் கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் கொக்குவில் லயன்ஸ் கழகத் தலைவர் என். எஸ். சத்தியதாசன் தலைமையில் 50 பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# நாட்டில் கொரோனா மீண்டும் அதிகரிக்கின்றது!

கொழும்பு, ஒக். 19

கொரோனா நோயாளர்களில் கீழ் மட்டத்தில் அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது மீண்டும் அதிகரித்து வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, மீண்டும் கொரோனா பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

பயணத்தடை மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமையே இந்த நிலைமைக்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பொதுப் போக்குவரத்து சேவைகள் தொடர்பில் திருப்திகொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**DEPARTMENT OF COMMUNITY AND FAMILY MEDICINE,**
**FACULTY OF MEDICINE**

**INTERVIEW IN VIRTUAL MODE FOR THE POST OF TEMPORARY RESEARCH ASSISTANT**

An interview in virtual (online) mode will be held via ZOOM for the **POST OF TEMPORARY RESEARCH ASSISTANT**on **1st of November 2021 at 2.00pm.**
Candidates who have passed the final examinations in Medicine/ Biomedical Science/ Allied Health Sciences from state Universities or UGC recognized foreign universities are encouraged to apply.

| Post | Salary scale |
|---|---|
| **Temporary Research Assistant** | **Rs.49, 860/- (Fixed) per month** |

**REQUIREMENTS**
1. A First or Second Class (Upper Division) in a Special Degree in the relevant subject.
   **OR**
2. A Second Class (Lower Division) in a Special Degree in the relevant subject.
   **OR**
3. An Ordinary Pass in a Special Degree in the relevant subject.

**NOTE:**
a. An applicant, who is eligible under (3) above, could be considered for appointment only if no applicant is qualified under (1) or (2) above.

b. An applicant, who is eligible under (2) above, could be considered for appointment only if no applicant is qualified under (1.) above.

c. The Subject Specialization in Medicine/ Biomedical Science/ Allied Health Sciences would be considered as **RELEVANT SUBJECT** for the post of Temporary Research Assistant.

Perfected Application Form which is available in the website http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf. Scanned documents of educational qualifications, the copy of the bank paid slip for a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No. 970000090000387 of Bursar, University of Jaffna and other relevant certificates should be sent to the Senior Assistant Registrar/ Faculty of Medicine, University of Jaffna through email: **deanmedicine@univ.jfn.ac.lk on or before 27th of October 2021.**

ZOOM link will be notified in due course, only to the shortlisted candidates.

Registrar
18.10.2021

## விவசாயிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா மாவட்டத்தில் கோவில் குளம், பம்பைமடு, நெடுங்கேணி, கனக ராயன்குளம் கமநல சேவைகள் முன்பாக வும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், முள்ளியவளை மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம், துணுக்காய் கமநல சேவைகள் திணைக் களம் முன்பாகவும் கவனவீர்ப்புகள் நடந்தன. இதேபோன்று, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர் கள், 'அரசே எமது விவசாயிகளுக்கும் எமது மண்ணுக்கும் சீன உரக்கழிவுகள் வேண்டாம்", "அரசே விவசாயிகளுக்கு பசளை வேண்டும்", "அரசே விவசாயி களுக்கான உரத்தையும் உர மானியத்தை யும் உடனே வழங்கு", "சேற்றில் கால் வைக்காத உனக்கு சோற்றில் கை வைக்க வும் உரிமை இல்லை", "கோட்டாபய அரசே யூரியா பசளையை நிறுத்திய நீ ஏன் இயற்கை பசளையை தரவில்லை" என்று எழுதப்பட்ட சுலோக அட்டை களை ஏந்தியிருந்ததுடன், அது தொடர் பான கோஷங்களையும் எழுப்பினர். (ஐ-02 -03)

## அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தக் கருத்தை வெளியிட்டார்.

பிரதேச செயலகங்களில் கலை பாடங்கள், விளையாட்டுக்களை கற்பிக் கக்கூடிய திறமையானவர்கள் பிரதேச செயலகங்களில் உள்ளனர். நீண்ட நாட் கள் இடைவெளியின் பின்னர் பாட சாலைக்கு திரும்பும் மாணவர்களை அன்புடன் வரவேற்க வேண்டும். அன்று ஆசிரியர்கள் சமுகமளிக்காவிடின் அபி விருத்தி உத்தியோகத்தர்களை பயன் படுத்தி அவர்களுக்கான விளையாட்டு, கலை பாடங்களை கற்பிக்க முடியும். இரு நாட்கள் அவர்கள் இந்தப் பாடங் களை கற்பிப்பர்.

அனைத்து பிரதேச செயலாளர்களும் பாடசாலை நடவடிக்கைகளை கண் காணித்து உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வர் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும், பாடசாலையைவிட்டு வில கிய 18, 19 வயதினருக்கு அவர்களின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை களில் சனிக்கிழமைகளில் இந்தத் தடுப் பூசி வழங்கப்படும். தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு 18, 19 வயது அனைவரும் தமது தேசிய அடையாள அட்டையை அன்றையதினத்தில் தமது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை யில் சமர்ப்பித்து தமது வயதை உறுதிப் படுத்துவது அவசியமாகும்.

தடுப்பூசி அல்லது வேறுமருந்து களிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச் சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளிலும் எதிர்வரும் 23, 30ஆம் திகதி சனிக்கிழ மைகளில் வழங்கு வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனையில் அல்லது பாடசாலையில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப் படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந் துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசி யினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு 18, 19 வயதுடையவர்க ளுக்கு தடுப்பூசி வழங்கலானது முடிவுக்கு வரும் நிலையில் அதனைத் தொடர்ந்து 17, 16, 15 வயதுடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ஐ)

# வாக்களித்த சிங்கள மக்களே அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் கூறினார் மனோ எம். பி.

யாழ்ப்பாணம், ஒக். 19
வாக்களித்த சிங்கள மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணே சன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இதனைத் தெரிவித்தார்.

தற்போது தெற்கு அரசியலில் ஆட்சி மாற்றம் என்ற ஒரு காற்று வீசுகின்றது. எனினும், எதிரணியினராகிய நாம் பொறுத்திருந்து அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது, இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்த சிங்கள மக்களே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட் டில்தான் நாங்கள் உள்ளோம்.

ஆனால், ஒரு கேள்வி எழுகின்றது. நீங்கள் - எதிர்க்கட்சிகள் ஏன் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே அது. இதற்கு நாங்கள் கூறும் பதில் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தை சிங்கள மக்களே, "நீங்கள் காணும் வீட்டுக்குச் செல்லுங்கள்", என்று கூறும் நிலைதான் தற்போது உருவாகியுள்ளது. எனவே, சிங்கள மக்களே அந்த இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் முயற்சிக்கும்போது நாங்கள் தற்போது அவசரப்பட வேண் டிய தேவை இல்லை - என்றார். (ஐ)

# ஜனாதிபதியுடன் கலந்துரையாடி பயணத்தடை குறித்து தீர்மானம்

## சுகாதார சேவை பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 19
நாட்டில் தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னர் நீக்குவதா அல்லது நீடிப்பதா என்பது குறித்து இறுதித் தீர்மானம் ஜனாதிபதியுடன் கலந்துரை யாடி மேற்கொள்ளப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

பதுளை பொது மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற் கொண்டதன் பின்னர் ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக் கும்போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

தற்போதைய கொரோனா நிலைமை யில் சுகாதார அமைச்சு பல்வேறு கட் டுப்பாடுகளை தளர்த்தியுள்ள நிலையில், பொதுமக்கள் பொறுப்புடன் செயற் படாமல் இருப்பார்களானால் மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல் படுத்த நேரிடும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய முறைமையை திட்டமிட வேண்டி யேற்படுவதால் இந்த நிலைமை உருவாகு மென அவர் கூறியுள்ளார்.

நாட்டின் கொரோனா தொற்று நிலைமையை கருத்திற் கொண்டு முழுமையான சுகா தார பாதுகாப்பு நடைமுறை களை பின்பற்றி மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர் பில் சுகாதார அதிகாரிகளுடன் திட்ட மிடப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித் துள்ளார்.

விகிதாசார முறைமையின் கீழ் மாகாண சபை தேர்தலை நடத்துவதற் காக கிட்டத்தட்ட 400 கோடி ரூபா நிதி செலவாகுமென அவர் கூறியுள்ளார்.

கொரோனா பாதுகாப்பு முறைமை யின் கீழ் தேர்தலை நடத்துவதற்காக செலவிடப் படும் நிதி அதிகரிக்கலாம் எனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல் முறைமை தொடர்பில் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற செயல்குழுவுக்கு அறிவிக் கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## 2022...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பே நாட்டின் உச்ச சட்டம். அது கல்லில் அமைக்கப்படவில்லை. சமூகத்தின் இயல்பும் தேவைகளும் மாறும்போது அரசமைப்பும் மாற வேண்டும் என்றும் அவர் இதன்போது கூறினார்.

புதிய அரசமைப்பை உருவாக்க நாட்டின் சிறந்த வழக்கறிஞர்கள், புத்திஜீவிகளை உள்ளடக்கிய குழுவை ஜனாதிபதி நியமித்தார். சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழு ஜனாதிபதியின் ஆணையை நிறைவேற்றிவிட்டது.

நிதியமைச்சர் பஸில், ராஜபக்ஷவால் வரும் நவம்பர் 12ஆம் திகதி பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும். இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 10ஆம் திகதி நடக்கும். எனவே, 2022 ஜனவரியில் புதிய அரசமைப்பில் பாராளுமன்றம் கவனம் செலுத்தும் - என்றும் கூறினார். (ஐ)

# 5 விபத்துக்களில் அறுவர் மரணம்!

கொழும்பு, ஒக். 19
நாட்டில் 5 இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கட்டுகஸ்தோட்டை, அம்பலங் கொட, ஹலாவத்த, மொனராகலை மற்றும் கந்தளாய் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் குறித்த விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

இதற்கமைவாக கண்டி, கட்டுகஸ் தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - குருநாகல் வீதி, செனரத்கம பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று பாதசாரி பெண் ஒருவர் மீது மோதி வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள் ளது. இதில் பெண் ஒருவர் பலியானார்.

காலி, அம்பலாங் கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு- காலி வீதியில் டிப்பர் ரக வாகனம் ஒன்று கார் ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டது. இதில், காரின் சாரதியும், மற்றொருவரும் மரணமாகினர்.

சிலாபத்தில், குருநாகல் - சிலாபம் வீதி, முன்னேஸ்வரம் பிரதேசத்தில் லொறி ஒன்று எதிரே வந்த ஓட்டோ ஒன்றுடன் மோதியதில், ஓட்டோ சாரதி உயிரிழந்தார்.

இதேவேளை, மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹெரகல வீதி, போப்பிட்டிய பிரதேசத்தில் மோட் டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப் பாட்டை இழந்து பாதசாரி பெண் ஒரு வர் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் பாதசாரி பெண்ணும் படு காயமடைந்த நிலையில் மொன ராகலை வைத்தியசாலையில் சேர்க்கப் படும் போது பெண் மரணமடைந்தார்.

மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த 70 வயது பெண்ணே இவ்வாறு மரண மடைந்தார்.

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவு, 91ஆம் மைல்கல் பிரதேசத்தில், மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட் டுப்பாட்டை இழந்து மின்சாரத் தூண் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது. இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது மரணமடைந்தார். (ஐ)

## செட்டிகுளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

மதவாச்சி - மன்னார் பிராதான வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் செட்டிகுளம், முதலி யார்குளம் பகுதி யில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளா னது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த 15 வயது சிறுவன் மரண மடைந்தார்.

விபத்து தொடர்பில் டிப்பர் சாரதி செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை செட்டி குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விபத்தில் செட்டிகுளம், முகத் தான்குளம் பகுதியைச் சேர்ந்த ஆ.சயந் தன் (வயது 15) என்ற சிறுவனே இவ் வாறு மரணமடைந்தவராவார். (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொரோ னாத் தொற்றால் மரணித் தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயி ரத்து 507 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## 569தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றி லிருந்து மேலும் 354 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 92 ஆயிரத்து 975 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu




# டக்ளஸ்க்கு மீன்பிடி அமைச்சு பதவி எதற்கு? இரு நாட்டு தமிழர்களை மோத செய்யவா?

## மனோ கணேசன் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19

**“கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்ததிலும் சதி உள்ளதோ தெரியாது. இரு நாட்டுத் தமிழர்களும் மோதி விரோத மனத்துடன் வாழவேண்டும் என்பதற்காகத்தான் டக்ளஸுக்குக் கடற்றொழில் அமைச்சை ராஜபக்ஷக்கள் வழங்கினார்களோ என்று தெரியாது.”**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்., திண்ணை விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எங்கு எந்தப் பிரச்னை வந்தாலும் நான் குரல் கொடுப்பேன். வடக்கு மீனவர்கள் பெரும் துன்பத்தைச் சந்தித்தவர்கள். போரை நாம் விரும்பவில்லை. போரைச் செய்தவர்களிடம் தர்க்க ரீதியிலான கருத்து இருந்தது.

வடக்கு மீனவர்களின் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும். இந்திய மீனவர்கள் 30 வருடங்களாக இலங்கை கடல் வளத்தை பயன்படுத்துகின்றனர். இதனால் இந்தியாவில் தற்போது இலங்கை வளத்தைப் பயன்படுத்திய ஒரு தலைமுறையே உருவாகிவிட்டது.

இந்தியாவில்கூட மாநிலம் மாறி வேறு மாநிலத்தில் மீன்பிடிக்க முடியாத நிலையில் இலங்கை எல்லைக்குள் வருவதும் பிரச்னைக்குரிய விடயம். இதற்கு இலங்கை மீனவர்களுக்குப் பாரிய கப்பல்களை வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்ததிலும் சதி உள்ளதோ தெரியாது. இரு நாட்டுத் தமிழர்களும் மோதி, விரோத மனத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் டக்ளஸுக்குக் கடற்றொழில் அமைச்சை ராஜ்பக்ஷக்கள் வழங்கினார்களோ என்று தெரியாது. இதனை வெறும் மீனவர்களின் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல் தமிழர்களின் பிரச்னையாகப் பார்க்க வேண்டும் என்று அரசியல் தலைவர்களைக் கோர விரும்புகின்றேன்” - என்றார். (இ - 03)

# மரண அறிவித்தல்

மலர்வு 20 - 03 - 1971



உதிர்வு 14 - 10 - 2021

## விஜிதரன் செல்வரத்தினம்

யாழ். நவாலி அரசடியைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா New Jersey ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விஜிதரன் செல்வரத்தினம் கடந்த 14-10-2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், செல்வரத்தினம் – காலஞ்சென்ற லலிதா தேவி தம்பதிகளின் மூத்த மகனும், லிங்கேஸ்வரியின் பெறாமகனும், சுந்தரலிங்கம் – நாகேஸ்வரி(வவுனியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், சுமதியின் அன்புக் கணவரும், டன்சிகா, கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கந்தசாமி மற்றும் சுசிலாதேவி ஆகியோரின் பெறாமகனும்,காலஞ்சென்றவர்களான அரியம், தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும்,சுரேஷ்குமார், ஆனந்தி தேவி, நவநீதன், வித்யா ஆகியோரின் மைத்துனரும், சுஜிதரன், சஜிதரன், நிரோஜிதா, சரணிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சுலக்ஷன், ஆரூஷன், சன்சிகா, அஸ்வதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,ராஜினி அவர்களின் அன்பு அண்ணனும்,அலைனா, அபின்யா, நிகிதா, நைனிகா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 19 Oct 2021 10:00 AM - 12:00 PM
Galante Funeral Home 2800 Morris Ave, Union, NJ 07083, United States

*தகனம் :*
Tuesday, 19 Oct 2021 12:00 PM - 1:00 PM
Fairmount Cemetery & Crematory 620 Central Ave, Newark, NJ 07107, United States

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சுரேஷ்குமார் - மைத்துனர்**
**Mobile : +19418223788**

தகவல்:
**குடும்பத்தினர்**

# 219 கிலோ மஞ்சளுடன் இருவர் சிக்கினார்கள்!



*மன்னார், ஒக். 19*

*மன்னார், குஞ்சிக்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து 219 கிலோகிராம் மஞ்சளுடன் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த இராணுவத்தினர், அந்தச் சோதனைச் சாவடி வழியாகப் பயணித்த லொறியை வழிமறித்துச் சோதனையிட்டபோதே 219 கிலோகிராம் மஞ்சளுடன் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.*

*இதன்போது சுமார் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*குறித்த இருவரும் கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் லொறியுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ)*

# ஒளிப்படப்பிடிப்பாளரால் சிறுமி வன்புணர்வு; பின்னணி பற்றி பொலிஸ் தீவிர விசாரணை

*யாழ்ப்பாணம், ஒக். 19*

*13 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாநகரில் இயங்கும் ஒளிப்படப்பிடிப்பு நிறுவனத் தின் உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பின்னணி தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

*ஒளிப்படப்பிடிப்பு நிறுவனத்தின் உரிமையாளரால் எடுக்கப்பட்டன எனக் கூறப்படும் சிறுமியின் சில ஒளிப்படங்களை வெளியிட முயற்சித்த சிலரை பொலிஸார் தேடி வருகின்றனர்.*

*யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவிலில் 13 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாநகரில் ஒளிப்படக் கலையகம் நடத்துபவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.*

*அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*கடந்த ஒன்றரை வருடங்களாக உறவினரான சந்தேகநபர் பல தடவைகள் தன்னை வன்புணர்ந்தார் என பாதிக்கப்பட்ட சிறுமி வாக்குமூலம் வழங்கியிருந் தார்.*

*பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட மருத்துவ வல்லுநரின் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்தேகநபரின் கீழ் பணியாற்றும் சிலர் சிறுமியின் ஒளிப் படங்களை வைத்திருந்தமை தொடர்பில் கண்டறிந்தனர்.*

*அந்த ஒளிப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிடலாம் என்ற அடிப்படையில் அவற்றை வைத்திருந்தவர்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட் டுள்ளது.*

*அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.*

*அத்துடன், சந்தேகநபரின் நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர விசாரணை களை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.*

*(இ - 03)*







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - பூஜை, பெட்ரோல் மாக்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு